# 2018

# මධ්‍යම පළාතේ
# හයවෙනි පළාත් සභාවේ
# පස්වෙනි අයවැය ප්‍රකාශය

# மத்திய மாகாணத்தின்
# ஆறாவது மாகாண சபையின்
# ஐந்தாவது வரவுசெலவுத் திட்ட உரை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கௌரவ தலைவர் அவர்களே,

கௌரவ அமைச்சர்களே,

கௌரவ எதிர்க்கட்சித் தலைவர் அவர்களே,

கௌரவ உறுப்பினர்களே,

மத்திய மாகாண சபையின் ஆறாவது மத்திய மாகாண சபையின் ஐந்தாவது வரவு செலவுத் திட்ட அறிக்கையை இந்த கௌரவ மிகு சபையில் முன்வைக்கும் இந்தச் சந்தர்ப்பத்தில் கலந்து கொண்டிருக்கும் உங்கள் அனைவரையும் மிகவும் கௌரவத்துடன் வரவேற்கிறேன். மத்திய மாகாண சபையில் மட்டுமன்றி இந்நாட்டின் ஏனைய சகல மாகாண சபைகளையும் ஒப்பிட்டுப் பார்த்தால் அதிகமான வரவு செலவு அறிக்கைகளை முன் வைக்கும் முதலமைச்சர் என்ற வகையில் மத்திய மாகாண சபையின் ஆறாவது மாகாண சபையின் ஐந்தாவது வரவு செலவுத் திட்ட உரையினை முன்வைக்கக் கிடைத்தமையை பாக்கியமாக கருதுகிறேன். இன்று முன் வைக்கும் இந்த வரவு செலவுத் திட்ட உரை ஐந்தாவது மாகாண சபையின் இறுதியான வரவு செலவு திட்ட உரையாவதற்கு பெரும்பாலும் இடம் இருக்கிறது. ஏனென்றால் அடுத்த வருடம் எமது மாகாண சபையின் ஆட்சிக் காலம் முடிவடைய இருப்பதால் 2017ஆம் ஆண்டுக்கேற்ப 2018ஆம் ஆண்டிற்காகவும் எமது மாகாண சபைக்காக அதிகளவு நிதி ஒதுக்கப்பட்டிருப்பதை முதலில் நான் உங்களனைவருக்கும் ஞாபகப்படுத்த விரும்புகிறேன். அதன்படி மூலதன முதலீட்டிற்காக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2017ஆம் ஆண்டை விட 26% அதிகமான தொகை எதிர் வரும் ஆண்டிற்காக ஒதுக்கப்பட்டுள்ளது. 2017ஆம் ஆண்டில் மத்திய மாகாண மாகாண சபைக்கு 2,222 மி.ரூபா மூலதன முதலீட்டு நிதி ஒதுக்கப்பட்டிருந்தாலும். 2018ஆம் ஆண்டிற்காக இந்த அளவு 2810 மி.ரூபா வரை 587 மி.ரூபா மேலதிகமாக அதிகரித்துள்ளது. இந்த அதிகமாக கிடைத்துள்ள தொகையை நான் மாகாணத்தின் அபிவிருத்தித் தேவைகளின் முன்னுரிமை அடிப்படையில் அமைச்சுக்கள் மற்றும் மாகாண நிறுவனங்களுக்கு ஒதுக்கித்தர நடவடிக்கை எடுக்கவுள்ளேன் என குறிப்பிட விரும்புகிறேன். இந்நிதி ஒதுக்கீட்டை தொழிநுட்ப ரீதியிலும் பொதுவான அடிப்படையிலும் மாகாணத்தின் தேவைக்கேற்ற விதத்தில் ஒதுக்குவதற்கு நடவடிக்கை எடுப்பேன்.

2017ஆம் ஆண்டின் வரவு செலவு திட்ட உரையை முன் வைத்து நான் அறிவித்தவாறு அதிமேதகு ஜனாதிபதி அவர்களின் நோக்கத்தின்படி ஏழ்மையிலிருந்து விடுவிக்கும் ஆண்டு 2017" எனப் பெயரிட்டு நடைமுறைப்படுத்தப்பட்ட தேசிய வேலைத்திட்டங்களுக்கு மத்திய மாகாணத்தின் ஒத்துழைப்பை உயர்வான மட்டத்தில் பெற்றுக்கொடுக்க கூடியிருந்தமை பற்றி நாம் அனைவரும் மகிழ்ச்சியடைய முடியும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2030ஆம் ஆண்டில் நிலையான அபிவிருத்தியின் இலக்கினை அடையும் ஒரே எதிர்ப்பார்ப்புடன் நடைமுறைப்படுத்தப்படும் இலங்கையின் சமூக, பொருளாதார அபிவிருத்தி வேலைத்திட்டங்களுக்க ஏற்ப 2017ஆம் ஆண்டில் எமது மாகாண சபையின் அமைச்சுகள், திணைக்களங்கள், நிறுவனங்கள், அதிகார சபைகள் பிரிவுகள் மற்றும் அலகுகளால் நடைமுறைப்படுத்தப்பட்ட அபிவிருத்தி வேலைத்திட்டங்கள் மாகாண மக்களின் சமூக பொருளாதார அபிவிருத்திக்கு பேருதவி மற்றும் உந்து சக்தியாக இருந்தது என்பதை சுட்டிக்காட்ட வேண்டும். இதன்படி 2018ஆம் ஆண்டில் ஒவ்வொரு விடயத் தலைப்புகளுக்கும் நிதி ஒதுக்கீடு செய்யும் போது இந்த நிலையான அபிவிருத்தியின் இலக்கினை அடைந்து மாகாண மக்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துவதற்குத் தேவையான அபிவிருத்தி வேலைத்திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்காக கவனமெடுத்து நிதித் தொகைகளை சகல பிரிவுகளுக்கும் ஒதுக்கித்தர நடவடிக்கை எடுப்பேன்.

மத்திய மாகாணத்திற்கு உரியதான சமூக பொருளாதார புள்ளிகள் பலவும் புள்ளி விபரத் தகவல்களை ஆய்வுக்குட்படுத்திப் பார்க்கும் போது மாகாண சபை பயணிக்க வேண்டிய திசை மற்றும் அதன் செயல் திறன்கள் பற்றி மீண்டும் ஒருமுறை உங்களினதும் எங்களினதும் கவனத்தை மீண்டுமொருமுறை மிகுந்த கவனத்திற்குட்படுத்துவதற்கு விரும்புகிறேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கௌரவ தலைவர் அவர்களே,

மத்திய மாகாணத்தில் 2016ஆம் ஆண்டின் மத்தியில் வருடாந்த திட்டமிடலின் போது சனத்தொகை 2,722,000 (இருபத்தேழு இலட்சத்து இருபத்திரெண்டாயிரம்) ஆகும். தற்போது இலங்கையின் சனத் தொகை 21,444,000 (214 லடசத்திற்கு) அதிகமாகும். மொத்த சனத்தொகையின் சதவீதமான பார்க்குமிடத்து நாட்டின் ஜனத்தொகையில் 12.7% மானோர் எமது மாகாணத்தில் வசிக்கின்றனர். அதே போன்று மாகாணத்தின் மக்களது வறுமைச் சுட்டெண் 1995/96 ஆம் வருடங்களில் 36.2% மாக இருந்ததெனினும் மாகாணத்தின் அபிவிருத்திப் பெறுபேறுகள் மக்களிடம் சென்றடைவதன் மூலம் இந்த பெறுமானம் 2002 ஆம் ஆண்டில் 25.1% வரையும் 2006/2007ஆம் ஆண்டுகளில் 22.3% வரையும், 2009/2010ஆம் ஆண்டுகளில் 9.7% வரையும் 2012/2013ஆம் ஆண்டுகளில் 6.6% வரையும். அதேபோன்று 2016ஆம் ஆண்டில் இதன் பெறுமாணம் 5.4% வரையும் குறைந்த மட்டத்திற்கு கொண்டு வரக் கூடியதாக இருந்தது. இச் செயல்பாடுகளில் மாகாண சபை என்ற வகையில் நாம் பெற்றுள்ள வெற்றி பற்றி எமக்கு திருப்தியடையக் கூடியதாக இருப்பினும் ஏனைய மாகாணங்களோடு ஒப்பிடுகையில் இன்று நாம் வறுமைக் கோட்டின் ஐந்தாவது இடத்திற்குட்பட்டுள்ளோம் என்பதையும் மறந்துவிட முடியாது. இந்த வறுமைக் கோட்டின் மிகவும் திருப்தியடையக்கூடிய தன்மையைப் பெற்றுக் கொடுக்க நாம் அனைவரும் திடசங்ககல்பம் கொள்ள வேண்டுமென்பது போல



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதற்குத் தேவையான சாதகமான நடவடிக்கைகளையும் மேற்கொள்ள வேண்டும். இலங்கையின் பொதுவான நிலைமையை நோக்குமிடத்து வறுமைக் கோட்டின் பெறுமானம் 2016ஆம் ஆண்டில் 4.1% மாக இருந்ததுடன் நாம் 5.4% மான உயர் மட்டத்தில் இருக்கிறோம். குறுகிய காலத்திற்குள் ஆகக் குறைந்தது தேசிய மட்டத்தை எட்டுவதற்குத் தேவையான நடவடிக்கைகளை நாம் மேற்கொள்ள வேண்டியுள்ளது.

வறிய மக்கள் தொகை பற்றிய புள்ளி விபரத்திற்கேற்ப 2916ஆம் ஆண்டில் மத்திய மாகாணத்தின் வறிய மக்கள் தொகை 142,000 ஆகும். இந்தப் பெறுமாணம் இலங்கை சனத்தொகையாக எடுக்கும் போது 844,000 ஆகும். இதன்படி இலங்கையில் வாழும் வறிய மக்களில் 16.8% மானோர் மத்திய மாகாணத்தில் என புள்ளி விபரங்களில் சுட்டிக்காட்டப்படுகிறது. இந்த நிலைமை பற்றி எமது முக்கிய கவனமெடுக்க வேண்டிய நிலைமையுள்ளது.

கௌரவ தலைவர் அவர்களே,

சமூகப் பொருளாதார சுட்டிகளாக தொழிலின்மை பற்றியும் எமது கவனம் செலுத்தப்பட வேண்டியுள்ளது. அதன்படி மத்திய மாகாணத்தின் தொழிலின்மை விகிதம் 5.1% மாகும். இந்த விகிதம் தேசிய மட்டத்தில் நாடென்ற ரீதியில் 4.4% மட்டத்திலுள்ளது. இந்த நிலைமை சம்பந்தப்பட்ட எல்லா துறைகளிலும் கவனத்தை செலுத்தி மாகாணத்தில் தொழிலின்மையை குறைப்பதற்கு நடவடிக்கை வேண்டியுள்ளது. ஏனைய மாகாண சபைகளோடு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒப்பிடுகையில் எமது மாகாணத்தின் தொழிலின்மை விகிதத்திற்கேற்ப ஆறாவது நிலைமைக்கு ஆளாகியுள்ளது. மாகாணத்திற்குள் தொழிலை தோற்றுவிப்பதன் மூலம் முன்னெடுத்துச் செல்வதற்கு வழிவகுத்துக்கொள்ளல் உங்களினதும் எங்களினதும். பொறுப்புகளாகும் என்பது போல பிரதேசத்தின் பிரஜை என்ற வகையில் கடமையுமாகும்.

மாகாணத்தில் தொழில்களை உற்பத்தி செய்து வருமான உற்பத்திக்கு மக்களை தூண்டுவதற்காக மாகாணத்தின் மக்கள் தொகையினை முக்கிய பொருளாதாரப் பிரிவுகளில் ஈடுபடுவதற்கான தெளிவினைப் பெற்றுக்கொள்வது பொறுத்தமாகும் என நான் நினைக்கிறேன். பொருளாதாரத்தின் முக்கிய பிரிவாக கருதும் போது விவசாயத்துறைக்கு தொழிலுக்காக எமது மாகாணத்தில் ஈடுபடுவது 2016ஆம் ஆண்டில் 36.6% இருக்கும் போது கைத்தொழில் துறைக்கு 21.6% மும் மற்றும் சேவைத் துறையில் ஈடுபடுவதற்கு 41.9% மானதாகும். மாகாணத்தில் தொழிலற்ற சிரம ஊழியர்களை மேலே குறிப்பிடப்பட்ட பிரிவுகளில் தொழிலிலீடுபடுத்துவதற்கான செயல்முறைகளை சம்பந்தப்பட்ட நிறுவனங்களும் உத்தியோகத்தர்களும். ஏற்பாடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்குமாறு நான் அன்புடன் கேட்டுக்கொள்கிறேன். அரசியல் மட்ட ஒத்துழைப்பையும் இதற்காக பெற்றத்தருவார்கள் எனவும் நான் நம்புகிறேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொருளாதாரத்தின் முக்கிய பிரிவுகளான விவசாயம்,கைத்தொழில் மற்றும் சேவைப்பிரிவுகளிலிருந்து மத்திய மாகாண சராசரி தேசிய உற்பத்திற்கு வழங்கப்படும் ஒத்துழைப்பின் மீது எமது கவனத்தை செலுத்துவதும் பெறுமதியானதாகும். அதன்படி 2017ஆம் ஆண்டின் மத்திய வங்கி சமூக,பொருளாதார புள்ளி விபரத்தின்படி படி 2015ஆம் ஆண்டில் மொத்த தேசிய உற்பத்திக்கு மத்திய மாகாண ஒத்துழைப்பின்படி 10.3% மாகும். இந்த ஒத்துழைப்பை ஏனைய மாகாண சபைகளுடன் ஒப்பிடுகையில் எமது மாகாணத்திற்கு நாலாவது இடமே கிடைக்கிறது. இந்த நிலைமையை மேம்படுத்தி மாகாணத்தை முன்னெடுத்துச் செல்வதற்கு நாம் அணைவரும் மூலதன முதலீட்டினை முதலீடு செய்யும் போது மிகுந்த கவனத்தை செலுத்தி செயல்பட வேண்டியது அவசியமாகும். மாகாணத்திற்கு கிடைக்கும் மூலதன மூதலீடுகளை செயல்திறமை போடும் தன்மையளிக்கும் விதத்திலும் பயன்டுத்திக்கொள்ள நடவடிக்கை எடுக்குமாறு பொறுப்புக்கூற வேண்டிய எல்லோரிடமும் கேட்டுக்கொள்கிறேன்.

**தேசிய வேலைத்திட்டங்களை நடைமுறைப்படுத்துதல் மற்றும் மேலதிக மூலதன முதலீட்டு எடுத்துக்காட்டுதலும்.**

அதிமேதகு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அவர்களின் நோக்கத்திற்கேற்ப ஜனாதிபதி செயலாளர் காரியாலயத்தினால் நடைமுறைப்படுத்தப்படும் தேசிய வேலைத்திட்டங்கள் பலவற்றின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆரம்பம் மத்திய மாகாணத்தில் நிறைவேற்றப்படுவது எமது மாகாணம் பெற்ற வெற்றியாகும். மாகாண அரசியல் தலைமை மற்றும் அரச உத்தியோகத்தர்களின் கூட்டுச் செயல்பாடுகளும் ஒன்றிணைந்து தேசிய வேலைத்திட்டங்களை வெற்றிகரமாக ஏற்பாடு செய்வது இவ்வாறு எமது மாகாணத்தின் மீது தேசிய ரீதியிலான நம்பிக்கை வைப்பதற்கு காரனமானது என்பதை பெருமையுடன் தெரிவிக்க விரும்புகிறேன். இவ்வாறு எம்மால் வெற்றிகரமாக ஏற்பாடு செய்யப்பட்ட தேசிய வேலைத் திட்டங்கள் ஒரு சிலதைப் பற்றி மட்டும் உங்களது கவனத்திற்காக முன்வைக்க விரும்புகிறேன்.

- ❖ கெங்கல்ல மகா வித்தியாலயத்தில் 2017.01.19ஆம் திகதி நடைபெற்ற நிலையான பாடசாலை அபிவிருத்தி வேலைத்திட்டம்.
- ❖ வில்கமுவ நாமினி ஒய தேசிய பாடசாலையில் 2017.03.13ஆம் திகதி நடைபெற்ற சிறுநீரக நோய் நிவாரண தேசிய வேலைத்திட்டம்.
- ❖ திகன மாகாண விளையாட்டு மைதானத்தில் 2017.09.08ஆம் திகதி நடைபெற்ற சிறுவர்களைப் பாதுகாப்போம் தேசிய வேலைத்திட்டம்.
- ❖ தெல்தொட்ட – கந்தேதென்ன குளப்பகுதியில் 2017.10.11ஆம் திகதி நீரேந்துப் பிரதேச பாதுகாப்பு வேலைத்திட்டத்தோடு தொடர்புடைய "வனரோப்பா" தேசிய வேலைத்திட்டம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கௌரவ தலைவர் அவர்களே,

இந்த தேசிய வேலைத்திட்டங்கள் அனைத்தும் அதிமேதகு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அவர்கள் உட்பட்ட விசேட அதிகளின் பங்களிப்புடன் வெற்றிகரமாக நடத்தப்படுவதற்கு கூடியதாக இருந்தமை எமது மாகாணத்திற்கு கிடைத்த கௌரவமாக நான் காண்கிறேன். இனி வரும் ஆண்டிலும் இவ்வாறான தேசிய வேலைத்திட்டங்கள் எமது மாகாணத்தைக் கேந்திரமாகக் கொண்டு மக்களுக்கு அர்ப்பணிக்க நாம் முன்னோடியாகத் திகழ வேண்டும்.

2018 ஆண்டிற்காக எமது மாகாண சபைக்கு ஒதுக்கப்பட்டுள்ள மூலதன முதலீட்டு நிதி மாகாணத்தின் அபிவிருத்தித் தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்வதற்கு போதுமானது அல்ல என்பதால் பல்வேறு உபாய வழிகளை பயன்படுத்தி முறையான செயல் முறைகளால் தேசிய வேலைத்திட்டங்களின்படி மற்றும் நடுவன் அமைச்சுக்கள், திணைக்களங்கள். அரச சார்பற்ற நிறுவனங்கள், தனியார் பிரிவினர் மற்றும் நன்மை பெறுவோரின் ஒத்துழைப்பையும் பெற்றுக்கொண்டு மேலதிக மூலதன முதலீட்டு நிதிகளை பெற்றுக்கொள்ள அரசியல் தலைமைத்துவம் போன்று அரச உத்தியோகத்தர்களும் செயல்பட வேண்டியுள்ளது. அதற்காக உங்கள் அனைவரினதும் விசேட கவனத்தை செலுத்தி செயல்படுமாறும் வலியுறுத்திக் கேட்டுக்கொள்கிறேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடந்த வருட வரவு செலவு திட்ட உரையில் மத்திய மாகாண அபிவிருத்திக்காக ppp நுழைவு (Public Private Partnership) கொள்கையினை நடைமுறைப்படுத்துமாறு வலியுறுத்தினேன். 2018ஆம் ஆண்டில் இந்த எண்ணக்கருவை மேலும் நன்மை பயக்கும் விதத்திலானதாக்க pppp (Public Private People Partnership) எண்ணக்கருவிற்கேற்ப சம்பந்தப்பட்டவர்களின் ஒத்துழைப்புடன் மாகாணத்தின் சமூக, பொருளாதார அபிவிருத்திக்காக செயல்படுவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு உங்கள் அனைவரிடமும் கேட்டுக்கொள்கிறேன்.

மத்திய மாகாணத்தின் மொத்த அபிவிருத்தி பற்றி இதுவரை பேசிய நான் இப்பொழுது முதல் ஒவ்வொரு விடயத்துறைக்கும் உட்பட்டு 2017 ஆம் ஆண்டில் பெற்றுக் கொள்ளப்பட்ட முன்னேற்றம் மற்றும் 2018ஆம் ஆண்டிற்கான நிதி ஒதுக்கீடு செய்வது சம்பந்தமாக கருத்துக்களைத் தெரிவிப்பதற்கு எதிர்ப்பார்க்கிறேன்.

கௌரவ தலைவர் அவர்களே,

முதலில் எமது மாகாண சபையின் 2018ஆம் ஆண்டிற்காக நிதி ஆணைக்குழு மூலம் திறைசேறியிலிருந்து பெற்றுக் கொள்ளப்படவுள்ள நிதியும் அந்த நிதியினை பகிர்ந்தளிக்கவுள்ள விதத்தையும் தெரிவிக்க விரும்புகிறேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**வருமானமும் கொடுப்பனவுகளும் ஒப்பிடுதல்** **ரூ: மில்லியன**

| | |
|---|---|
| பொதுவான கொடுப்பனவு | 25,383.296 |
| அரசினால் வழங்கப்படும் வருமானம் | 4,950.000 |
| மாகாண வருமான இலக்கு (முத்திரை கட்டணம்,நீதிமன்ற தண்டம் தவிர) | 1,725.000 |
| உள்ளூராட்சி திணைக்களுக்கு மாற்றப்பட வேண்டிய வருமானம். | |
| முத்திரை கட்டணம் | 1,670.000 |
| நீதிமன்ற தண்டம் | 97.000 |
| மாகாண நிலையான அபிவிருத்தி கொடை | 1,996.107 |
| உபமானிய கொடை | 388.800 |
| வெளிநாட்டு நன்கொடை | 424.800 |
| **மொத்தம்** | **36,635.003** |

**செலவின ஒப்பீடு** **ரூ: மில்லியன்**

| | |
|---|---|
| மீண்டெழும் செலவு | 2,809.707 |
| முதலீட்டு செலவினம் | 33,825.296 |
| **மொத்தம்** | **36,635.003** |

**மீண்டெழும் செலவினங்கள் கீழே குறிப்பிட்டப்பட்டவாறு ஒதுக்கப்பட்டுள்ளது.**

**ரூ: மில்லியன்**

| | |
|---|---|
| ஆளுநருக்கும் அவரது ஆளணியினர்க்கும் | 18.561 |
| சபை செயலார் காரியாலயம் | 131.457 |
| பிரதான அமைச்சும் ஆளணியும் | 30.123 |
| உள்ளூராட்சி திணைக்களம் | 2,514.756 |
| சுகாதார அமைச்சும் ஆளணியினரும் | 13.554 |
| பாதைகள்அமைச்சும் ஆளணியினரும் | 13.772 |
| கைத்தொழில்அமைச்சும் ஆளணியினரும் | 15.534 |
| விவசாய அமைச்சும் ஆளணியினரும் | 17.716 |
| மாகாண அரச சேவையின் ஆளணியினரின் சம்பளமும் ஏனைய செலவுகளும் | 31,069.823 |
| **மொத்தம்** | **33,825.296** |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்த மூலதன செலவினங்களுக்குள் வெளிநாட்டு உதவியாக 424.8 மி.ரூபா கிடைப்பதுடன் அந்த நிதியினை அந்த வேலைத்திட்டங்களுக்கே செலவழிக்க வேண்டும். எஞ்சிய தொகையான 2,384.907மி. ரூபாவை மாகாணத்தின் அபிவிருத்தி நடவடிக்கைகளுக்காக சம்பந்தப்பட்ட அமைச்சுக்களுக்கு வழங்கப்படவுள்ளது.'.

கௌரவ தலைவர் அவர்களே,

மூலதன செலவினமான கிடைக்கும் 2,809.707 மி.ரூபாவை மாகாணத்தின் தேவைக்கேற்ப ஒவ்வொரு முறைக்கும் வைப்பிலிடுவதற்கேற்ப நிதி ஆணைக்குழுவினால் ஒதுக்கப்பட்டுள்ளது விகிதமுறையையும் கவனத்திற்கெடுத்து அந்தந்த பிரிவுகளுக்காக ஒதுக்கித்தர நினைக்கிறேன்.

**கல்வி அபிவிருத்தி**

கௌரவ தலைவர் அவர்களே,

புதிய உலகை வெற்றி கொள்வதற்கு கைகொடுத்து சகல பிள்ளைகளுக்கும் சமமான கல்விச் சந்தர்ப்பத்தை வழங்கு முகமாக மத்திய மாகாணத்தின் கல்வித்துறையை மேம்படுத்துவதற்கான இலக்கை நோக்கி மத்திய நாட்டுப் பாடசாலைகள் 1521ன் (தேசிய பாடசாலைகள் 54உம் உட்பட) 34183 ஆசிரியர்களுடாக 544208 மாணவர்களின் அறிவு,திறன், மனப்பாங்கு என்பவற்றின் விருத்திக்காக 2017ஆம் ஆண்டில் கல்வித் துறையில் மனித மற்றும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பௌதீக வள அபிவிருத்திக்காக மேற் கொள்ளப்பட்ட சேவைகள் அளப்பரியவையாகும். அதில் ஒன்றிணைக்கப்பட்ட நிதி ஒதுக்கீட்டின் கீழ் 240 மி.ரூபாவும், "நெனோதா" வேலைத்திட்டத்தின் கீழ் 20 மி. ரூபாவும்யுனிசெப் உதவித் தொகையின் கீழ் 7.52 மி.ரூபாவும் முதலீடு செய்யப்பட்டு வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன. இவ்வாறு முன்னெடுக்கப்பட்ட வேலைத்திட்டங்களை சுருக்கமாக முன்வைப்பதற்கு இதை நான் ஒரு சந்தர்ப்பமாக எடுத்துக்கொள்கிறேன்.

அதன்படி ஒன்றிணைக்கப்பட்ட நிதியின் கீழ் செயல்படுத்தப்பட்ட நிதியின் கீழ் செயல்படுத்தப்பட்ட வேலைத்திட்டங்கள்.

| தொ.இ | வேலைத்திட்டங்கள் | வேலைத் திட்டங்களின் எண்ணிக்கை | முதலீடு ரூ.மி. |
|---|---|---|---|
| 1. | கட்டட நிர்மான வேலைகள் மற்றும் பழுதுபார்த்தல் | 39 | 177.6 |
| 2. | பாடசாலை பொறுப்பு கூறும் செயல்பாடுகள் மற்றும் பாதுகாப்பு கணக்காய்வு வேலைத்திட்டம். | 1 | 1.0 |
| 3. | பாடசாலை நீர் மின்சாரம் மற்றும் சுகநல பாதுகாப்புத் தேவைகள். | 69 | 15.0 |
| 4. | ஆசிரிய விடுதிகளை நிர்மானித்தலும் பழுதுபார்த்தலும் | 8 | 14.0 |
| 5. | வலயக் கல்விக் காரியாலயங்களின் அபிவிருத்தி செயல்பாடுகள் | 9 | 19.0 |
| 6. | தளபாட விநியோகம் மற்றும் பழுதுபார்த்தல். | 1 | 13.4 |
| மொத்தம் | | 127 | 240.0 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"நெனோதா" நிதியின் கீழ் நடைமுறைப்படத்தப்பட்ட வேலைத்திட்டங்கள்.

| தொ.இ | வேலைத்திட்டங்கள் | வேலைத் திட்டங்களின் எண்ணிக்கை | முதலீடு மி.ரூபா |
|---|---|---|---|
| 1 | தொழிற் பயிற்சி நிலையங்களின் அபிவிருத்தி வேலைத்திட்டங்கள் | 25 | 12.0 |
| 2 | தேசிய மட்ட பரீட்சைகளின் பெறுபேறுகளை அதிகரிக்கும் வேலைத்திட்டங்கள். | 65 | 3.5 |
| 3 | "நெலும்வில" நல்லொழுக்க அபிவிருத்தி வேலைத்திட்டம் | 14 | 0.2 |
| 4 | "உறுமயக்க அருமய" வேலைத்திட்டம் | 1 | 0.3 |
| 5 | தளபாட விநியோகம் மற்றும் பழுதுபார்த்தல் | 1 | 4.0 |
| | **மொத்தம்** | **106** | **20.0** |

**அறிவை நோக்காகக் கொண்ட பாடசாலைக் தொகுதிகளை மீளப்புதுப்பிக்கும் வேலைத்திட்டம். (TSEP)**

கல்வித் துறைசார் அபிவிருத்தி வேலைத்திட்டங்களின் கீழ் (ESDFP) மாகாண கல்வித் திணைக்களம் முக்கிய கருப் பொருள்கள் மூன்றினை தமது நோக்காகக்கொண்டு கல்வி அபிவிருத்திப் பணிகளை நடைமுறைப்படுத்துவதுடன் அதன் மூலம் உலக வங்கி உதவிக் கொடையின் கீழ் நடைமுறைப்படுத்தப்படும் அறிவை நோக்காகக் கொண்ட பாடசாலைத் தொகுதிகளை மீளப்புதுப்பிக்கும் வேலைத்திட்டத்தின் (TSEP) கீழ் 2017 ஆம் ஆண்டிற்குள் கோட்டக் கல்விக் காரியாலயங்கள் இரெண்டினதும் மூன்று பாடசாலைகளினதும் பௌதீக வள விருத்தியை மேற்கொள்ளல், தெரிவு செய்யப்பட்ட ஆரம்பம் மற்றும் இடைநிலை பாடசாலைகளின் நீர், மற்றும் சுகநலத் தேவைகள், மின்சாரம், விடுதிகள்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தளபாடங்கள் மற்றும் தொலைபேசி வசதிகள் போன்ற வேலைத்திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டன.

**யுனிசெப் (Unicef) வேலைத்திட்டம்**

கௌரவ தலைவர் அவர்களே,

வாசிக்க, எழுத முடியாத மாணவர்களை வலய மட்டத்தில் இனங்கண்டு உழுத்தறிவு மேம்பாட்டு முகாம்கள் இரண்டினை நடத்துதல், தரமான கல்விச் செயல்பாடகளை வலுவள்ளதாக்குவதற்காக நிதி நிரந்தரத் தன்மையை மேம்படுத்தும் நோக்காகக் கொண்டு வருமானத்தை ஈட்டும் வேலைத்திட்டங்களை நடைமுறைப்படுத்துதல், சிறுவர் நட்பு தொகுதிகள் 6ற்கு ஆரம்ப வகுப்புகளுக்கன உபகரணத் தொகுதிகளை அறிமுகம் செய்தல் சிறுவர் நட்பு பாடசாலைகளின் முன்னேற்றத்திற்காக ஆக்கத் திறன் கண்காட்சிகளை நடத்துதல் மற்றும் பங்கு பற்றியவர்களை மதிப்பிடல் பாடசாலை ஏந்துப் பிரதேச வரை படங்களை குறித்தல். முன் பிள்ளைப் பருவ சிறார்கள் பற்றிய ஆய்வு அறிக்கைகளைத் தயாரித்தல், பிள்ளைகள் பாடசாலைக்கு சமூகமளிக்கும் மேம்பாட்டு வேலைத்திட்டம் என்பன இதன் கீழ் நடைமுறைப்படுத்தப்படுகிறது.

**அண்மித்த பாடசாலை நல்ல பாடசாலை.**

அறிவு திறன் மனப்பாங்கு நிரம்பிய மாணவப் பரம்பரையொன்றை உருவாக்குவதங்காக மத்திய அரசின் கல்வி அமைச்சின் மூலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாகாண மட்டத்தில் நடைமுறைப்படுத்தும் “அண்மித்த பாடசாலை நல்ல பாடசாலை வேலைத்திட்டத்தின் கீழ் தேசிய பாடசாலைகள் 47உம் உட்பட 948 பாடசாலைகளில் 6 செயல்பாட்டுத்திட்டத்தின் கீழ் 2009 தொழில்கள் தற்போது செயல்படுத்தப்பட்டு வருகிறது. இந்த வேலைத்திட்டத்திற்காக 6605 மி.ரூபா அனுமதிக்கப்பட்டுள்ளது. 2020ஆம் ஆண்டு வரை நடைமுறைப்படுத்தப்படும் இச் செயல் திட்டம் தற்போது நிதிப்பிரச்சினைக்குட்பட்டுள்ளது. தற்போது முடிக்கப்பட்டுள்ள வேலைத்திட்டங்களுக்கு கூட கொடுப்பணவுகளை செலுத்த முடியாத நிலைமை ஏற்பட்டுள்ளது. இந்த நிலைமையை தீர்த்துக்கொண்டு எமக்கு 2018ஆம் ஆண்டில் செயல்பட வேண்டியிருந்தது. நாம் எதிர்ப்பார்த்தபடி இந்த நிதியை எமது மாகாணத்திற்குப் பெற்றுக்கொள்ள முடியுமாயின் மாகாணத்தில் கல்வித் துறையில் காணப்படும் பல குறைபாடுகளை தீர்த்துக் கொள்ளக் கூடியதாக இருக்கும். இந்த வேலைத்திட்டங்களை மாகாணத்திற்குள் வெற்றிகரமாக முன்னெடுத்து செல்ல நாம் எதிர்ப்பார்க்கிறோம்.

2018ஆம் ஆண்டிற்கான மாகாண நிலையான அபிவிருத்திக் கொடையின் கீழ் கல்வி அபிவிருத்திக்காக 225 மி.ரூபாவும், நெனோதா கல்வி அபிவிருத்திக்காக 60 மி.ரூபாவும் வெளிநாட்டு உதவி வேலைத்திட்டங்களுக்காக 75 மி.ரூபாவும் என்ற வகையில் 360 மி.ருபாவை ஒதுககித் தர நான் முன்மொழிகிறேன். இதற்கு மேலதிகமாக அண்மித்த பாடசாலை நல்ல பாடசாலை வேலைத்திட்டம் மற்றும் ஏனைய கல்வி அபிவிருத்தி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திட்டங்களுக்காக சம்பந்தப்பட்ட நிதிப் பிரவாகத்தினூடாக 2018ஆம் ஆண்டில் நிதி ஒதுக்கீடு வழங்க எதிர்ப்பார்க்கிறேன்.

**காணி அபிவிருத்தி**

கௌரவ தலைவர் அவர்களே,

மத்திய மாகாண சபை அதிகாரப் பிரதேசத்திற்குள் அமைந்துள்ள காணி மற்றும் அதோடு சம்பந்தப்பட்ட வளங்களைப் பொறுப்பேற்று அவற்றை மக்களின் அபிவிருத்திக்காக பல்வேறு பாவனைக்குட்படுத்தப்படும் போது பொருளாதார, சமூக, சுற்றுச் சூழல் என்பவற்றை அவதானித்து சரியான முகாமைத்துவத்தை நடைமுறைப்படுத்தப்பட்டது, மாகாணத்திற்குள் நிலவும் காணிப் பற்றாக் குறை மற்றும் சுற்றுச் சூழல் காரணிகளை கவனமெடுத்து காணியற்றவர்களுக்கு காணிகளைப் பகிர்ந்தளிப்பதற்காக இந்த வருடத்திலும் நடவடிக்கை எடுக்கப்பட்டது. அதன்படி தெரிவு செய்யப்பட்ட மக்கள் குடியிருப்புகளின் உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்தல் குடியிருப்பு காணிகளை அபிவிருத்தி செய்தல், பாடசாலைக் காணிகளைக் கையகப்படுத்திக்கொள்ளல், குடியிருப்பு பாதைகளை மேம்படுத்துதல் மண்ணரிப்பைத் தடுத்தல் மற்றும் பொருளாதாரப் பயிர்ச் செய்கையை ஊக்குவித்தல் மற்றும் பாதுகாத்தல் போன்ற அபிவிருத்தி வேலைத்திட்டங்களுக்காக. 7.5 மி.ரூபா செலவழிக்கப்பட்டது 23 வேலைத்திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. அடுத்த வருடத்திலும் நிறுவன செயல்பாடுகளை அதிகரித்து மாகாணத்தின் காணி விடயத்திற்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நில நடவடிக்கைகளை நிறைவேற்றுவதற்காக 6 மி.ரூபாவை ஒதுக்க முன் மொழிகின்றேன்.

**உள்ளூராட்சி**

மத்திய மாகாணத்தின் உள்ளூராட்சி நிறுவனங்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ள விடயங்களையும் அதன் நோக்கங்களை பயனுள்ள வகையில் நடைமுறைபடுத்துவதற்கு இயன்ற வகையிலே நட்பு ரீதியான வழிகாட்டல் வசதிகளை ஏற்படுத்திக்கொடுத்தல், உதவி செய்தல் என்பவற்றின் மூலமாக நல்லாட்சியின் உள்ள (திறமையான) வெற்றிகரமான உள்ளூராட்சி பிரிவொன்றை மத்திய மாகாணத்தினுள் ஸ்தாபிப்பதற்காக 2017ஆம் வருடத்திலே ஏற்படுத்தப்பட்ட செயற்பாடுகள் விசாலமானதாகும். 2017ஆம் வருடத்தில் உள்ளூராட்சி சபைகளுக்காக ஒதுக்கப்பட்ட நிதியின் அளவு 57 மி.ரூபா ஆகும். இதன்கீழ் இந்த வருடத்திற்குள் உள்ளூராட்சிப் பாதைகள் அபிவிருத்தி வேலைத்திட்டங்கள் 93ற்காக 32 மி.ரூபா செலவழிக்கப்பட்டுள்ளது. அதே போல பாரிய கழிவு முகாமைத்துவம் செயல்திட்டத்தின் மூலமாக கிழிவுகளை அப்புறப்படுத்துவதற்காக கம்பெக்டர் இயந்திரங்களை பெற்றுக்கொடுத்தல். மீள் சுழற்சி பொருட்களை சேகரிக்கும் மத்திய நிலையங்களை ஆரம்பித்தல். கொம்போஸ்ட் பிரிவை ஆரம்பித்தல் புதுப்பித்தல். வீடுகளுக்கு ஜீவ இரசாயன உர கலன்களை பெற்றுக்கொடுத்தல். விழிப்புணர்வு வேலைத்திட்டங்களை நடாத்துதல் போன்ற வேலைத்திட்டங்களுக்காக 16மி.ரூ செலவழிக்கப்பட்டது. இதற்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேலதிகமாக பொதுச்சந்தைகளை புதுப்பித்தலும் பராமரித்தலும் கிழமை சந்தை புதுபித்தலும் முறைப்படுத்தலும் தகன கருவிகளும் மயான பூங்காக்களை புதுபித்தலும் பொது மலசலகூடங்களை புதுபித்தலும் பராமரித்தலும். ஆயுர்வேத வைத்தியசாலைகளில் அத்தியாவசிய தேவைகளை பராமரித்தலும் புதுபித்தலும் பொது மலசலக்கூடங்களை பழுதுபார்த்தல், பராமரித்தல். முன்பள்ளிகளையும் சிறுவர் பூங்காக்களினதும் அடிப்படை வசதிகள் அபிவிருத்தி போன்ற வேலைத்திட்டங்கள் 08ற்கு 7மி.ரூபா செலவழிக்கப்பட்டது.

அரசின் நிதி ஒதுக்கீட்டின் மூலமாக பிரதேச சபைகள் வலுப்படுத்தப்படுவதன் தேசிய வேலைத்திட்டத்திற்கு அமைய மத்திய மாகாணத்திற்குள் 52 வேலைத்திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டு வருவதோடு அதற்காக இதுவரை 116 மி.ரூபா முதலீடு செய்யப்பட்டுள்ளது. இந்த வேலைத்திட்டத்தின் மூலம் உள்ளூராட்சி நிறுவனங்களின் அத்தியாவசிய மக்களின் அடிப்படை தேவைகள் மேம்பாட்டிற்காக தேவையான உதவிகளை வழங்குதல் இதன் மூலமாக மக்களுக்கு வழங்குகின்ற சேவைகளின் குணநல விருத்தியையும் வினைத்திறனையும் உயர்த்துதல் எமது நோக்கமாகும். நகரமயமாக்கல் வேலைத்திட்டத்தின் கீழ் இந்த வருடத்தில் 1293 மி.ரூபா செலவழித்து 41 வேலைத்திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. கிராமியப்பாதைகள் 1000 கி.மீ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அபிவிருத்தி செய்யும் வேலைத்திட்டத்தின் கீழ் 61 வேலைத்திட்டங்களுக்காக 80 மி. ரூபாவை மாகாணத்திற்குள் முதலீடு செய்யக் கூடியதாக இருந்து. நாடு பூராவும் தொல்லையாக பரவிய டெங்கு நோயை கட்டுப்படுத்துவதற்காக முறையான கழிவு முகாமைத்துவத்தைப் பேணி மக்களின் நாளாந்த நடவடிக்கைகளை இலகுவாக்கிக்கொள்ள மத்திய மாகாணத்தின் உள்ளூராட்சி நிறுவனங்கள் எடுக்கும் முயற்சியை நான் மதிக்கிறேன். உள்ளூராட்சி நிறுவனங்களின் அத்தியாவசிய சமூக உட்கட்டமைப்பு வசதிகளை அதிகரிப்பதற்கும் ஏனைய அபிவிருத்தி வேலைகளுக்கும் 2018ஆம் ஆண்டில் 86 மி.ரூபாவை ஒதுக்குவதற்கு முன்மொழிகிறேன்.

**கலாசார செயற்பாட்டு அபிவிருத்தி**

கௌரவ தலைவர் அவர்களே,

கலாச்சார கலை பாரம்பரிய உரிமைகளை பாதுகாக்கின்ற சந்ததியினரை, உருவாக்குவதற்காக விசேச ஒத்துழைப்பு வழங்கப்பட்டதன் மூலம் கலாச்சார, மத விழாக்களுக்காக இந்த வருடத்தினுள் மத்திய மாகாணத்தினுள் பல வேலைத்திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படுகின்றது. நிகழ்ச்சிகளுக்காக இந்த இதற்காக ஒதுக்கப்பட்டுள்ள நிதி 8.0 மி.ரூபா ஆகும். இதன் அடிப்படையில் மக்கள் கலைகள் பாதுகாப்ப, மக்கள் படைப்புகள் மக்கள் இலக்கிய படைப்புகள் மக்களது எழுத்து, மக்களது வாசிப்பு திறன்களை அபிவிருத்தி செய்யும் நோக்கமாக வேலைத்திட்டங்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடைமுறைப்படுத்தப்பட்டது. மேலும் கலைகல்லூரிகள் அபிவிருத்தி கலைக்கல்லூரி தலைவர்கள் பயிற்சி மத்திய மாகாண அரச நடனக் குழுக்கள் அபிவிருத்தி செய்தல் கலாரசனை பண்பாட்டு வளர்ச்சிக்கு வேலைத்திட்டங்களை அறநெறி பாடசாலை மாணவர்களது திறமை, வெளிப்பாட்டு செயற்பாடுகள் ஆகியன நடைமுறைப்படுத்தப்பட்டு வருவதுடன் இந்து, இஸ்லாம் கலாசார வேலைத்திட்டங்களும் நடைமுறைப்படுத்தப்பட்டது. அது போலவே வருடந்தோறும் மத்திய மாகாணத்தின் சகல கலைஞர்களதும் திறமைகளை பாராட்டும் முகமாக மதிப்பதற்காக மத்திய மாகாண கலை கலாசார விழா குழு நாடகங்களையும் குருந்திரைப்படங்கள், குழந்தை நடனவிழா, சித்திர போட்டிகள் என்பன சிரேஷ்ட கலைஞர்களின் கௌரவ பாராட்டு விழாக்களும் நடத்தக்கூடியதாக இருந்தது. ஒவ்வொரு வருடத்தையும் போல இந்த வருடமும் சதஹம் "சிசில" மதஸ்தலங்கள் அபிவிருத்தி வேலைத்திட்டத்தின் கீழ் 20 மி.ரூபா பயன்படுத்தி 27.4 மதஸ்தலங்களில் வேலைத்திட்டங்களை நடத்தக் கூடியதாக இருந்தமை மகிழ்ச்சிக்குரிய விடயமாகும். ஏனைய மாகாணங்களோடு ஒப்பிடும் போது எமது மாகாணத்திற்கு கலாச்சாரப் பிரிவுக்கு. முக்கிய இடம் கிடைக்கிறது. மாகாண கலாச்சார அபிவிருத்திக்காக 2018ஆம் ஆண்டில் 15 மி.ரூபாவை ஒதுக்குவதற்கு நான் முன் மொழிகிறேன்.

**சுற்றுலாத் துறை வளர்ச்சி**

உள்நாட்டு,வெளிநாட்டு சுற்றுலாப்பயணிகளை கவரக்கூடியதாக்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுற்றாடல், கலாசார பெறுமதி மிக்க, சுற்றுலா கைத்தொழில் பெறுமதி மிக்க கவர்ச்சியான இடங்களை இனங்கண்டு அதற்கான அடிப்படை வசதிகளை அபிவிருத்தி செய்வதன் மூலமாக உள்நாட்டு வெளிநாட்டு சுற்றுலா பயணிகளுக்காக மிகவும் விருப்பத்திற்குரிய வசதிகளை வழங்குவதும் கவர்ச்சிகரமான அந்த இடத்தை சுற்றுலாப் பயணிகளுக்கிடையில் பிரபல்யப்படுத்த சுற்றுலா துறைக்கு ஏற்ற பிரெஞ், ஜேர்மன், கொரியன் மற்றும் சீன மொழிகள் பயிற்சி நெறி நடாத்துதல், சுற்றுலா வழிகாட்டிகளுக்கு பயிற்சியளித்தல், பாடசாலை மாணவர்களுக்கான பாடசாலை சுற்றுலா குழுக்களை நியமித்து சுற்றுலா தளங்கள் சம்பந்தமான அறிவூட்டல் சுற்றுலா துறை சம்பந்தமான தொழிலிலீடுபட்டவர்களின் அவர்களின் திறமைகளை வளர்ப்பதற்கான வேலைத்திட்டங்கள் இந்த வருடத்தில் நடைமுறைப்படுத்தப்பட்டது. மேலும் சுற்றுலா துறை வளர்ச்சிக்காக மத்திய மாகாணத்தின் சுற்றுலா இணையத்தளத்தை மேம்படுத்துதல், சுற்றுலா தகவல் மையத்தின் வசதிகள் அபிவிருத்தி மற்றும் தேவையான வழிகாட்டல்கள் வழங்கப்பட்டுள்ளன. அதுபோலே வருடாந்தம் சிறப்பான விழாவாக உலக சுற்றுலா தினம் கண்டி தளதா பெரஹராவுக்கு சமாந்தரமாக (visit kandy" (இணையாக) கலாசார நிகழ்வுகள், விசேசமாக வெளிநாட்டு நுற்றுலா பயணிகளுக்காக இம்முறையும் நடத்தக்கூடியதாக இருந்தது. சுற்றுலாத்துறை அபிவிருத்திக்காக இந்த வருடமும் 20 வேலைத்திட்டங்களுக்காக 20 மி.ரூபா செலவழிக்கப்பட்டதுடன் இதற்கு மேலதிகமாக அரச நிதி ஒதுக்கீட்டின் கீழ் 132 மி.ரூபா செலவில் 10 வேலைத்திட்டங்களை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடைமுறைப்படுத்தக் கூடியதாக இருந்தது. இவ்வாறு நடுவன் அரசின் அமைச்சினூடாக மாகாணத்தின் ஏனைய நிறுவனங்களுக்காகவும் மேலதிக ஒதுக்கீட்டைப் பெற்றுக்கொள்வதற்காக . 2018ஆம் ஆண்டில் செயல்பட வேண்டுமென சம்பந்தப்பட்டவர்களை கேட்டுக் கொள்கிறேன். மாகாணத்தின் சுற்றுலா மேம்பாட்டிற்காக 2018ஆம் ஆண்டில் 25 மி.ரூபாவை ஒதுக்க நான் முன் மொழிகிறேன்.

**கூட்டுறவு அபிவிருத்தி**

கூட்டுறவு அபிவிருத்தி அமைப்புகளின் நல்லாட்சியினை உறுதிப்படுத்துமுகமாக வளவாளர்கள், ஆலோசகர் மற்றும் ஒத்துழைப்பாளராக நடவடிக்கை எடுத்து நல்லாட்சி கூட்டுறவுத் துறையொன்றை மாகாணத்திற்குள் ஸ்தாபிப்பதற்காக அர்ப்பணித்து கூட்டுறவு திணைக்களம் 2017ஆம் ஆண்டில் 5.மி.ரூபா செலவில் 21 வேலைத்திட்டங்களை நடத்தியுள்ளது. மேலும் சங்கத்தின் நிதியைக்கொண்டு பிரதேச மட்டத்தில் பல வேலைத்திட்டங்களை நடைமுறைப்படுத்துகிறது. சங்க நிதியை முறையாகப் பயன்படுத்தி நன்மை பெறுவோரின் நலனுக்காக கூட்டுறவு திணைக்களம் செயல்பட வேண்டியுள்ளது. அடுத்த வருடத்திற்காக இந்த விடயத்திற்காக 4 மி.ரூபாவை ஒதுக்க முன்மொழிகிறேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கூட்டுறவு ஊழியர்கள் ஆணைக்குழு**

இந்த நிறுவனம் கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழு அமைப்புகள் மற்று அதன் கீழ் உள்ள நிபந்தனைகளுடாக எழுப்பியுள்ள விதி முறைகளுக்கினங்க மத்திய மாகாண கூட்டுறவு ஊழியர்களின் செயல் மேம்பாட்டிற்காக செயல்பட்டு சுற்று நிருபங்களை அனுமதித்தல் ஆலோசனைகளை விநியோகித்தல், முறையீடுகளை விசாரித்தல் ஆணைக்குழுவின் விதிமுறைகளை மீறுவதற்கெதிராக சட்ட நடவடிக்கைகள் எடுத்துதல், நியமனங்களை வழங்குதல் ஒழுங்குகளை வடிவமைத்தல். சம்பள முறைகளையும் கொடுப்பனவுகளையும் அனுமதித்தல் போன்ற விடயங்களை நிறைவேற்றுகின்றது. நிறுவன கட்டமைப்பு அபிவிருத்தியினூடாக இந்த நிறுவனத்தின் எதிர்கால நடவடிக்கைகளை முறையாக முன்னெடுத்துச்செல்வதற்காக 2018ஆம் ஆண்டில் 0.8 மி.ரூபாவை ஒதுக்கீடு செய்ய முன் மொழிகிறேன்.

**நூலக சேவைகள் சபை.**

அறிவு மற்றும் தகவல்களை சுதந்திரமாகவும் தொடர்ச்சியாகவும் பெற்றுக்கொள்வதற்கான சந்தர்ப்பங்களை ஏற்படுத்திக் கொடுக்கும் நோக்கில் நூலக சேவை சபையினால் நடைமுறைப்படுத்தப்படும் வேலைத்திட்டங்களுக்கிடையில் பயிற்சி வேலைத்திட்டங்கள் மற்றும் விளக்கமளிக்கும் வேலைத்திட்டங்கள் முன்னுரிமை பெறும். அதன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போது மொழிப் பாசறைகள், சாத்தியமான நூல் ஆய்வுகள், இலக்கிய இரசனை, நூலகங்களுக்காக நூல்களை கொள்வனவு செய்தல். சாத்தியமான இலக்கிய போட்டிகள் நடத்துவதன் மூலம் பாடசாலை மாணவர்களின் மொழி அறிவு மற்றும் இரசனைத் தன்மை மேம்பாடு, பாடசாலை நூலகாப் பயிற்சி வேலைத்திட்டம், ஆவணக்கலைகள் பற்றிய செயலமர்வுகள், கண்காட்சிகள் மாற்றும் நூல் வெளியீடு போன்ற வேலைத்திட்டங்கள் 16ஐ 1.0 மி.ரூபா செலவில் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. இதற்கு மேலதிகமாக நூலக சேவைகள் சபை மாகாணத்தின் தரமேம்பாட்டிற்கும் மற்றும் தேவையான அறிவு பயிற்சிகளை வழங்கும் கேந்திர நிலையமாக செயல்பட வேண்டுமென குறிப்பிடுகிறேன். இந்த சகல நடவடிக்கைகளுக்காக 2018ஆம் ஆண்டிற்காக 2 மி.ரூபாவை ஒதுக்குவதற்கு முன்மொழிகிறேன்.

**சமூக நீர் வழங்கல் மற்றும் சுகநலப் பாதுகாப்பு.**

கௌரவ தலைவர் அவர்களே,

இந்த வருடத்தில் கிராமிய சமூக நீர் வழங்கல் திட்டங்கள் 79ற்காக 15 மி.ரூபா செலவழிக்கப்பட்டதுடன், அதன் போது செயலிழந்திருந்த நீர் வழங்கள் திட்டங்களை மீள செயலுறுப் பெறச் செய்தல், தற்போதைய நீர் வழங்கல் திட்டங்களை அபிவிருத்தி செய்தல், சூழல் பாதுகாப்பு வேலைத்திட்டங்களை நடைமுறைப்படுத்துதல், அரச உத்தியோகத்தர்கள் மற்றும் சமூக அடிப்படையிலான அமைப்புகளின் உத்தியோகத்தர்களுக்கான பயிற்சி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேலைத்திட்டங்களை செயல்படுத்துதல் மற்றும் சமூக அடிப்படை வேலைத்திட்டங்களை நடத்துதல் மற்றும் பராமரிப்பு பற்றிய கையேடுகளைத் தயாரித்தல், நீர் ஊற்றுப் பிரதேசங்களை இணங்கானல், தொழிநுட்ப ரீதியிலான ஆய்வுகளை மேற்கொள்ளல் போன்ற வேலைத்திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டன. புவியியல் ரீதியாக நிலவும் வேறு பாட்டின் பேரில் பல்வேறு பிரதேசங்களில் நன்னீர் தேவைகள் மற்றும் சுகநலன் நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக 2018ஆம் ஆண்டிற்காக உள்ளூராட்சி விடயத்தின் கீழ் ஒதுக்கப்படும் தொகையில் 17 மி.ரூபாவாக ஒதுக்க முன்மொழிகிறேன்.

## முன் பிள்ளைப் பருவ அபிவிருத்தி

முன்பிள்ளைப் பருவத்திலுள்ள பிள்ளைகளின் உரிமைகளைப் பாதுகாத்தலும், உடல் உள ரீதியாக ஊக்கமளித்தலும், அதற்காக முன் பிள்ளைப் பருவ அபிவிருத்தி நிலையங்களை ஏற்றுக்கொள்ளப்பட்ட விதத்தில் நடத்திச் செல்வதற்கான விதி முறைகளை தயாரித்து அவற்றை நடைமுறைப்படுத்துதல், நிர்வகித்தல், மேற்பார்வை செய்தல் மூலம் முறையாக பிள்ளைகளின் முன் பிள்ளைப்பருவத்தை தரமான விதத்தில் அபிவிருத்தி செய்து பாடசாலை கல்விக்காக முறையாகத் தயாரான பிள்ளைகளை மத்திய நாட்டில் உருவாக்குவதே முக்கிய நோக்கமாகும். அதற்காக முன் பிள்ளைப் பருவ அபிவிருத்திப் பிரிவின் மூலம் 2017ஆம் ஆண்டில் உபமானிய கொடைகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அபிவிருத்தி நிதியின் கீழ் 3 மி.ரூபாவும். யுனிசெப் வேலைத்திட்டத்தின் கீழ் 5 மி.ரூபாவும் முதலீடு செய்யப்பட்டு 125 வேலைத்திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டன. இந்த வேலைத்திட்டங்களின் மூலம் மத்திய மாகாணத்தின் முன்பள்ளிகளை முறையான தரத்திலானதாக மாற்றுவதும், கற்றல் கற்பித்தல் செயல்முறைகளை முறைப்படுத்துவதற்கும் எதிர்ப்பார்கிறேன். யுனிசெப் உதவியின் கீழ் தரமான முன்பள்ளியொன்று அரச ஊழியர்களின் பிள்ளைகளுக்கான பகல் பாதுகாப்பு நிலயமொன்று மற்றும் முன் பள்ளி பயிற்சிப் பிரிவொன்றுடன் குண்டசாலை பிரதேசத்தில் ஸ்தாபிக்க திட்டமிடப்பட்டிருந்தாலும் இதுவரை அதை வெற்றிகரமாக்கிக்கொள்ள முடியவில்லை. எதிர்வரும் வருடங்களில் இது சம்பந்தப்பட்ட அதிகாரிகள் பொறுப்பேற்பார்கள் என எதிர்ப்பார்க்கிறேன். மாகாணத்தின் முன் பிள்ளைப்பருவ அபிவிருத்தி செயல்பாடுகளை தொடர்ச்சியாக நடத்திச் செல்வதற்கு 2018ஆம் ஆண்டிற்காக 4 மி.ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது.

## சுகாதார சேவைகள் மேம்பாடு

கௌரவ தலைவர் அவர்களே,

மத்திய மாகாண மக்களின் உடல், உள, சுகாதாரம், என்பவற்றை உயர் மட்டத்திற்கு கொண்டு செல்லும் நோக்கில் நோய் நிவாரணம் மற்றும் நோய் தடுப்பு சேவைகள் நடைமுறைப்படுத்தப்படுகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதற்காக 2017 ஆம் ஆண்டில் பல்வேறு மூலாதாரங்களுள் கிட்டிய 635 மி.ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது. அதன் கீழ் வைத்தியசாலைகளின் வெளி நோயாளர் பிரிவுகள், வாட்டுகள் மற்றும் ஏனைய உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்தல் இரசாயன கூடங்கள் மற்றும் வாட்டு அபிவிருத்தி, வைத்தியம் மற்றும் வைத்தியமற்ற உபகரணங்களை வழங்குதல் ஆளணியினரைப் பயிற்றுவித்தல். சுகாதார மேம்பாட்டு பயிற்சி வேதைல்திட்டங்களை நடைமுறைப்படுத்துதல் மூலம் 2017ஆம் ஆண்டில் தரமான உயர் சுகாதார சேவையினை மக்களுக்கு பெற்றுக்கொடுக்க எமக்கு முடிந்தது.

இந்த வருடத்தில் மத்திய மாகாண சுகாதாரதுறைக்கு இந்திய உதவியின் கீழ் நிர்மானிக்கப்பட்ட டிக்கோய வைத்திய சாலை, மற்றும் ஜக்கா உதவியின் கீழ் நிர்மானக்கப்பட்ட தெல்தெனிய வைத்தியசாலையும் சேர்ந்தமை மாகாணத்தின் சுகாதார நிலைமை மேம்பாட்டிற்கு உந்து சக்தியாக இருந்தமை பற்றி கூறவே வேண்டும். சுகாதாரத் துறையை மேம்படுத்தி மாகாணத்தின் மக்கள் வாழ்வை, நோயற்ற தன்மைக்கு இட்டு செய்வதற்காக 2018ஆம் ஆண்டிற்காகவும் மாகாண நிலையான கொடையின் கீழ் 275 மி.ரூபாவும், வெளிநாட்டு உதவித்திட்டத்தின் கீழ் 324.80 மி. ரூபாவும் ஒதுக்குவதற்கு முன்மொழிகிறேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**ஆயுர்வேத சுகாதார சேவைகளை முன்னேற்றுதல்.**

மத்திய மாகாணத்தினுள் சுகாதார மேம்பாடு மிக்க மக்கள் கூட்டத்தை உருவாக்குவதற்காக பாரம்பரிய ஆயுர்வேத அறிவைப் பயன்படுத்தி நோய் நிவாரணம் மற்றும் சிகிச்சைச் சேவைகளை வழங்குவதற்காக 2017ஆம் ஆண்டில் 45 மி.ரூபா ஒதுக்கப்பட்டது. இதன் கீழ் மாகாணத்தின் ஆயுர் வேத வைத்தியசாலைகளின் அத்தியாவசிய உட்கட்டமைப்பு வசதிகளை அதிகரித்தல், சமூக,சுகாதார நிவாரண சேவைகளை நடைமுறைப்படுத்துதல் வருடாந்த வெளியீடுகளையும் ஆய்வு அறிக்கைகளையும் வெளியிடுதல் போன்ற செயல்பாடுகளின் மூலம் மத்திய மாகாணத்தின் மக்களுக்கு மிக்க கிட்டிய உயர் மட்ட சுகாதார சிகிச்சை சேவைகளை வழங்குவதற்கு கூடியதாக இருந்ததுடன் ஏனைய மாகாணங்களுக்கிடையில் ஒப்பிடுகையில் மத்திய மாகாண ஆயுர்வேத வைத்திய சாலைக்கு வரும் நோயாளிகளின் எண்ணிக்கை அதிகரித்து வருவதுடன் அதற்கான தேவைகளுக்கேற்ப வசதிகளை அதிகரித்து இந்த சேவையை தொடர்ந்தும் முன்னெடுத்து செல்வதற்காக 2018ஆம் ஆண்டில் 125.மி ரூபாவை ஒதுக்குவதற்கு முன் மொழிகிறேன்.

தற்போது ஆரம்பிக்கப்பட்டு வசதிகளுடன் சலுகைக்கட்டண அடிப்படையில் நோய் சிகிச்சை சேவைகளை வழங்குவதற்கான கேள்விகளுக்குரிய வழங்கல்களைப் பெற்றுக் கொடுக்கக் கூடியவாறு முன்னேற்றுவதற்கு நிவாரண சேவை முன்னேற்றம் ஆயுர்வேத ஆய்வுகளும் அபிவிருத்தியும் தேசிய வைத்திய அறிவை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேம்படுத்துதுல். தரமான மூலிகை உற்பத்தியும் சந்தைப்படுத்துதலும் தேசிய வைத்திய தொழில்கள் போன்ற வேலைத்திட்டங்களை 2018ஆண்டில் நடைமுறைப்படுத்துவதற்கு கவனம் செலுத்துமாறு கேட்டுக்கொள்கிறேன்.

**சமூக சேவைகள் நடவடிக்கைகள் அபிவிருத்தி**

மத்திய மாகாணத்தில் அங்கவீனத் தன்மைக்குட்பட்டோர்களைப் போன்று முறையான பாதுகாப்பு கிடைக்காமல் போக முதியோர்களைப் பாதுகாத்துக் கொள்வதும் எமது பொறுப்பாகும். 2017ஆம் ஆண்டில் இதற்காக 5.00 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது. இதன் கீழ் அங்கவீனத் தன்மைக்குட்டவர்களுக்கு வீடுகளை நிர்மானிப்பதற்கான நிதியுதவி செய்தல், சுகாதாரப் பாதுகாப்பு வசதிகளைப் பெற்றுக்கொடுத்தல் மற்றும் அங்கவீனத்துடனானவர்களின் தொழில் திறமைகளை உயர்த்துதல் போன்ற வேலைத் திட்டங்கள் பல நடைமுறைப்படுத்தப்பட்டது. எமது கவனம் செலுத்தப்பட வேண்டிய இவர்களுக்காக அவர்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துவதற்கான வேலைத் திட்டங்களுக்காக 2018ஆம் ஆண்டில் 15மி. ரூபாவை ஒதுக்குவதற்கு முன் மொழிகிறேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**நன்னடத்தை மற்றும் சிறுவர் பராமரிப்பு சேவைகள் அபிவிருத்தி.**

பெற்றோர்களின் அரவணைப்பு இவ்வாறு போன குழந்தைகளின் பாதுகாப்பிற்காக அவர்களுக்கு முறையான கல்வியைப் பெற்றுக்கொடுத்து சிறந்த பிரஜைகளாக சமூகமயப்படுத்தும் பொறுப்பு எமக்கு வழங்கப்பட்டுள்ளது. இக் குழந்தைகள் பற்றி செயல்படுவதற்காக நன்னடத்தை காரியாலயங்கள், அரச சிறுவர் விடுதிகள் மற்றும் பாதுகாப்பு நிலையங்கள் போன்று தொண்டர் சிறுவர் விடுதிகள் மத்திய மாகாணத்திற்குள் நடத்தப்பட்டு வருகிறேன். இக் காரணங்களுக்காக. 2017ஆம் ஆண்டில்16 மி.ரூபா ஒதுக்கப்பட்டிருந்ததுடன் இதன் கீழ் அரச பாதுகாப்பு விடுதிகளின் அத்தியாவசிய உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி, சிறுவர் துஸ் பிரயோகத்தைக் குறைத்தலுக்கான விளிப்பூட்டும் வேலைத்திட்டங்கள், தரித்திர நிலைமையால் துயருரும் குடும்பங்களின் பிள்ளைகளுக்காக கல்வி உதவிகளை வழங்குதல் போன்ற வேலைத்திட்டங்கள் பல நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. தற்போதைய சமூகத்தின் முக்கிய கவனம் செலுத்தப்பட்டுள்ள இப்பிரிவின் அபிவிருத்தி நடவடிக்கைகளுக்காக 2018ஆம் ஆண்டில் 75 மி.ரூபாவை ஒதுக்கித் தருவதற்கு முன் மொழிகிறேன்.

மேலேயுள்ள விடயங்களுக்கு மேலதிகமாக இவ்வாறு சமூகத்தின் பாதுகாப்பு தேவைப்படுபவர்களுக்கு சமூக பொருளாதார ரீதியில் ஊக்கமளித்து சமூகமயப்படுத்துவதற்குத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறும் மாகாணத்தின் ஏனைய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிறுவனங்களின் ஒத்துழைப்பை பெற்றுக் கொள்ளுமாறும் கேட்டுக்கொள்கிறேன்.

## விவசாய அபிவிருத்தி

கௌரவ தலைவர் அவர்களே,

2017ஆம் ஆண்டில் விவசாய அபிவிருத்திக்காக 56 மி.ரூபாவும் விவசாய வழிகள் அபிவிருத்திக்காக 5மி. ரூபாவும் ஒதுக்கப்பட்டிருந்தது. அதன் மூலம் மாகாண விவசாயத் திணைக்களத்திற்கு சொந்தமான பயிற்சி நிலையம் மற்றும் பண்ணைகளைக் நவீனமயப்படுத்துதல், விவசாய விசாலிப்பு வேலைத்திட்டங்களை நடத்துதல், நிலையான பாடசாலைகளை நிறுவுதல் விவசாயக் கன்றுகளுக்கான முற்பணக் கணக்குகளை ஏற்படுத்துதல், சிறு மற்றும் மத்திய அளவிலான வர்த்தகப் பயிர்ச் செய்கையை பிரபல்யப்படுத்துதல், விதை உற்பத்தியினை உயர்த்துதல், மேலதிக உணவுப் பயிர் உற்பத்தி போன்ற நடவடிக்கைகள் செயல்படுத்தப்பட்டன. அதேபோன்று 2017ஆம் ஆண்டில் விவசாய அபிவிருத்தி வேலைத்திட்டங்களின் கீழ் உற்பத்தியை அதிகரித்தல் மற்றும் உற்பத்தி செயற்றிறனை அதிகரிக்கும் நோக்கத்தில் விதை நெல் உற்பத்தி, விதை கிழங்கு உற்பத்தி, விதை போஞ்சி உட்பட்ட காய்கறி விதை உற்பத்திகளை அதிகரித்தல் மற்றும் பழங்கள், பூ பயிர்ச் செய்கை, காய்கறி உற்பத்தி மேம்பாட்டிற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டது. அதே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போல விவசாய வர்த்தகத்தை அபிவிருத்தி செய்யவும் தூர்ந்து போன வயல்களை மீண்டும் பயிர்ச்செய்கையில்டுபடுத்துவதன் மூலம் விவசாயத்துறையின் மீது மக்களை பெருமளவு ஈடுபட செய்வதற்கும் சிறு மற்றும் மத்திய தர விவசாயிகளை ஊக்குவிப்பதற்காக முன்னுரிமை வழங்கவும் எமக்கு செய்யக்கூடியதாக இருந்தது.

விசேடமாக தேசிய உணவு உற்பத்தி மேம்பாடு மற்றும் பண்ணைகளை அபிவிருத்தி செய்வதில் மிகுந்த கவனத்தை செலுத்தவும் வேலைத்திட்டங்கள் பயிற்சி வேலைத்திட்டங்கள் மூலம் மனிதவள அபிவிருத்தியின் மீது கவனத்தை செலுத்தவும் கூடியதாக இருந்ததுடன் இந்த வேலைத்திட்டங்களுக்காக 2018ஆம் ஆண்டிற்கு விவசாய அபிவிருத்திக்காக 60 மி.ரூபாவும் விவசாய வழிகள் அபிவிருத்திக்காக 10 மி.ரூபாவும் ஒதுக்குவதற்கு முன் மொழிகிறேன். கடந்த வருடங்களில் வெற்றிகரமாக நடைமுறைப்படுத்தப்பட்ட நகரத்திற்கு வீட்டுத் தோட்டம்" வேலைத்திட்டத்தை மேலும் விருத்தி செய்து நாகரிக, நகர பிரதேசங்களில் அரச நிறுவனங்களுக்கு மேலதிகமாக தனியார் வீட்டு அலகுகளையும் இந்த வேலைத்திட்டத்தோடு இணைத்துக்கொண்டு இந்த வருடத்திலும் செயல்படுத்துமாறு கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல அதி மேதகு ஜனாதிபதி அவர்களால் 2018 ஆண்டை "தேசிய உணவு உற்பத்தி வருடம்" என பெயரிடப்பட்டிருப்பதுடன் மத்திய மாகாணத்தில் இந்த விடயத்தை நிறைவேற்றுவதற்காக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விவசாய அமைச்சின் விசேட கவனத்தை செலுத்தி நடவடிக்கை எடுக்குமாறு சம்பந்தப்பட்ட அரசியல் தலைமைகளிடமும் உத்தியோகத்தர்களிடமும் கேட்டுக்கொள்கிறேன்.

**கால்நடை உற்பத்தியும் சுகாதார நடவடிக்கைகளும்.**

தரமான கால் நடை வைத்திய சேவைகளை உறுதிப்படுத்தும் நோக்கில் 2017ஆம் ஆண்டில் துறைசார் காரியாலயங்களின் பௌதீக வசதிகளை முன்னேற்றுதல், சிறு மற்றும் மத்திய அளவிலான வர்த்தக கால்நடைப் பண்ணைகளுக்காக வசதிகளை வழங்குதலும், புல் நூற்று மேடைகளை ஸ்தாபித்தலும் புல்லை நீண்ட காலம் தக்க வைத்துக்கொள்வதற்குப் பொறுத்தமான இயந்திரங்களை வழங்குதல், தரம் கூடிய பெறுமதியுடனான கைத்தொழிலை ஊக்குவித்தல், பால் சேகரிக்கும், களஞ்சியப்படுத்தும் வசதிகளை வழங்குதல் விவசாயிகள் பயிற்சி மற்றும் கால் நடை பராமரிப்பு சங்கங்களை ஊக்குவித்தல் போன்ற நடவடிக்கைகள் பல 36 மில்லியன் ரூபா செலவில் நிறைவேற்றப்பட்டன. தற்போது மத்திய மாகாணத்தின் வருடாந்த பால் உற்பத்தி 139 மில்லியன் லீட்டராகும். அது தேசிய பால் உற்பத்தியின் மூன்றில் ஒரு பங்காகும். 2018ஆம் ஆண்டில் தேசிய பால் உற்பத்திக்கு மத்திய மாகாணத்தின் பங்களிப்பினை மேலும் அதிகரிக்கும் நோக்கில் வேலைத்திட்டங்கள் நடைமுறைப்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது. அதன் கீழ் சிறு மற்றும் மத்திய அளவிலான பண்ணைகள் அபிவிருத்தி வசதிகளை வழங்குதல் மற்றும் நல்லரக கால்நடை கன்றுகளை அதிகரித்தலும், அதிகரிக்கப்பட்ட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெறுமதியுடனான கைத்தொழில்களை ஊக்குவித்தலும், கால்நடை வள அபிவிருத்திக்குத் தேவையான பௌதீக வசதிகளை ஏற்படுத்தும் வேலைத்திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படவுள்ளன. அதன்படி 2018ஆம் ஆண்டில் இதற்காக 38. மி.ரூபாவை ஒதுக்க முன் மொழிகிறேன்.

**சிறு நீர்ப்பாசன வேலைத்திட்டம்**

கௌரவ தலைவர் அவர்களே,

மத்திய மாகாண நீர்ப்பாசனத்திணைக்களத்தினூடாக இந்த ஆண்டில் நீர்த் தொகுதிகள் மற்றும் நீர்ப்பாசன பராமரிப்பு மற்றும் முன்னேற்றுதல், அதிக காணிப்பரப்புகளில் உற்பத்திக்கு ஊக்குவித்தல், சிறு நீர்ப்பாசனத் துறைகளின் செயல்திறனை அதிகரித்தல் மற்றும் முறையான நீர் முகாமைத்துவத்துடன் சிறு நீர்ப்பாசன வேலைத்திட்டங்களை நடைமுறைப்படுத்துதல் போன்றவை நிறைவேற்றப்பட்டுள்ளதுடன் இதற்காக 15 மி. ரூபா செலவழிக்கப்பட்டுள்ளது. அடுத்த ஆண்டு இவ்வேலைகளை செய்வதற்காக 50 மி ரூபா ஒதுக்குவதற்கு நான் முன் மொழிகிறேன்.

**நன்னீர் மீன்பிடி அபிவிருத்தி.**

மத்திய மாகாணத்தில் தெரிவு செய்யப்பட்ட சிறு நீர்த்தேக்கங்களில் உள்ள மீனினப் பெருக்கம் மற்றும் இறால் இனத்தை விருத்தி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்தலும் மீனவர்களின் சுகநலனை அதிகரித்தலும் நன்னீர் மீன்பிடித்துறைக்கு மக்களை தூண்டச் செய்தலும் மத்திய மாகாணத்து மக்களின் மீன் உணவு பயன்பாட்டை அதிகரித்தல் எனும் எதிர்ப்பார்ப்பில் 2017ஆம் ஆண்டு 2. மி.ரூபா செலவில் 4 வேலைத்திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டன. 2018ஆம் ஆண்டிலும் இனங்கானப்பட்ட வேலைத்திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்காக 5 மி.ரூபாவை ஒதுக்குவதற்கு முன் மொழிகிறேன். மேலும் இந்த வருடத்தில் நடுவன் அரசிலிருந்தும் 5 மி. ரூபாவை இந்தத்துறைக்கு பெற்றுக்கொள்ளக் கூடியதாக இருந்ததுடன் அதன் மூலம் 4 வேலைத் திட்டங்கள் வெற்றிகரமாகநடைமுறைப்படுத்தப்பட்டுள்ளன. 2018ஆம் ஆண்டில் இவ்வாறு நடுவன் அமைச்சின் நிதி ஒதுக்கீட்டினைப் பெற்றுக்கொண்டு சம்பந்தப்பட்ட அபிவிருத்தி நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு நான் சம்பந்தப்பட்டவர்களிடம் கேட்டுக்கொள்கிறேன்.

சுற்றுலா அபிவிருத்தி

கௌரவ தலைவர் அவர்களே,

“சூழல் புனிதமானது” எனும் கொள்கைக்கேற்ப மத்திய மாகாண சபையினால் ஸ்ரீபாத வணக்கத்தலத்திற்கும் ஸ்ரீ தளதா மாளிகைக்கும் வருகை தரும் பக்தர்களுக்காக ஸ்ரீபாத சிரமதான வேலைத்திட்டம், ஸ்ரீ தளதா சிரமதான வேலைத்திட்டம், சர்வதேச வெசாக் தினத்தோடு தொடர்புடைய சிரமதான வேலைத்திட்டங்கள் 2017 ஆண்டிலும் நடத்தப்பட்டதுடன் தளதா கலாச்சார கிரந்தத்தை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெளியிடும் நடவடிக்கையும் மேற்கொள்ளக் கூடியதாக இருந்தது. அதே போன்று சூழலும் மாணவ சக்தியும் வேலைத்திட்டம், உலக சுற்றாடல் தின வேலைத்திட்டம். கழிவு முகாமைத்துவ வேலைத்திட்டம், காடுகளின் பரப்புகளை அதிகரிக்கும் வேலைத்திட்டம் போன்ற பல வேலைத் திட்டங்கள் சுற்றாடல் அபிவிருத்தி வேலைத்திட்டங்களுக்காக 2017ஆம் ஆண்டில் ஒதுக்கப்பட்ட 2 மி ரூபாவில் மேற்கொள்ளக் கூடியதாக இருந்தது. இத்திட்டங்களை மேலும் முன்னேற்றுவதற்காக 2018ஆம் ஆண்டில் 3மி ரூபாவை ஒதுக்குவதற்கு முன் மொழிகிறேன். இத்துறை 2018ஆம் ஆண்டிலிருந்து பிரதான அமைச்சின் கீழ்நடைமுறைப்படுத்தப்படும் என்றும் குறிப்பிட விரும்புகிறேன்.

## இந்து கலாச்சார நடவடிக்கைகள் அபிவிருத்தி

இந்து கலாச்சார அபிவிருத்தி இந்து கலாச்சாரத்தின் மேம்பாட்டிற்கேற்ப தமிழ் கலாச்சார விழாக்களை நடத்துதல், இந்து கோவில்கள் புனரமைப்பு நடவடிக்கைகள், மற்றும் பொருள் உதவி வழங்கல், தமிழ் அறநெறிப்பாடசாலைகளுக்கு கணணி, புரொஜெக்டர், அச்சுப் பிரதி இயந்திரம், டுப்ளோ மெசின் வழங்கல், போன்ற நடவடிக்கைகள் மூலம் இந்து கலாச்சார நடவடிக்கைகள் மேம்பாட்டிற்காக பல நடவடிக்கைகளை இந்த வருடத்தில் நிறைவேற்றக் கூடியதாக இருந்தது. மத்திய மாகாணத்தில் வாழும் இந்துக்களின் கலாச்சார அபிவிருத்தி மற்றும் இந்து அறநெறிப் பாடசாலைப் பிள்ளைகளின் அறிவு மனப்பாங்கு விருத்தி, மத்திய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாகாணத்தில் பரவி இருக்கும் இந்து கோவிலிகளின் பௌதீக வசதிகளை அபிவிருத்தி செய்தல் போன்ற திட்டங்களை நடைமுறைப்படுத்துப்தற்காக 2 மி.ரூபாவை ஒதுக்குவதற்கு முன் மொழிகிறேன்.

**தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி**

தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி வேலைத்திட்டத்தின் கீழ் தோட்டப்புற மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தும் நோக்கில் 2017ஆம் ஆண்டில் 15.மி.ரூபாவைப் பயன்படுத்தி 17 தோட்டப் பாதைகளை அபிவிருத்தி செய்யக் கூடியதாக இருந்தது. அதே போல தோட்டப்புறங்களில் காணப்படும் உட்கட்டமைப்பு அபிவிருத்தித் தேவைகளை கவனத்திற்கெடுத்து தேவையான பாதைகளை அபிவிருத்தி செய்ய வேண்டி உள்ளது இதனால் தோட்டப்புறங்களின் உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்திகாக 2018ஆம் ஆண்டில் 35.மி.ரூபாவை ஒதுக்க முன் மொழிகிறேன்.

**தமிழ் கல்வி அபிவிருத்தி**

2017ஆம் ஆண்டில் இந்த விடயம் முதலமைச்சின் கீழ் செயல்பட்டாலும் 2018ஆம் ஆண்டிலிருந்து தமிழ் கல்வி அபிவிருத்தி விடயம் விவசாய அமைச்சின் கீழ் செயல்படுவதற்கு உள்ளது என்பதை நான் இந்த சந்தர்ப்பத்தில் வெளிப்படுத்த விரும்புகிறேன். அதன்படி தமிழ் கல்வி அபிவிருத்தி நடவடிக்கைகளுக்காக மாகாண நிலையான கொடையின் கீழ் 75 மி.ரூபாவை ஒதுக்க முன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மொழிகிறேன். அந்நிதிக்கு மேலதிகமாக வெளிநாட்டு உதவி வேலைத்திட்டத்தின் கீழ் 25 மி.ரூபாவை தமிழ் கல்விக்காக ஒதுக்குவதற்கு முன் மொழிகிறேன். இதன்படி 100 மி.ரூபா 2018ஆம் ஆண்டில் தமிழ் கல்வி அபிவிருத்தி நடவடிக்கைகளுக்காக ஒதுக்கப்படும்.

மேலும் தமிழ் கல்வி, தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் இந்து கலாசார அபிவிருத்திக்காக இந்த வருடம் நடுப்பகுதியில் விசேட நிதி ஒதுக்கீடாக 100 மி.ரூபா சம்பந்தப்பட்ட அமைச்சுக்கு பெற்றுக்கொள்ளக்கூடியதாக இருந்தமை பற்றி நான் விடயப் பொறுப்பு அமைச்சர் அவர்களுக்கு மாகாண முதலமைச்சர் என்ற வகையில் பாராட்டு தெரிவிக்கிறேன்.

**கைத்தொழில் அபிவிருத்தி மற்றும் விற்பனை வளர்ச்சியும் தொழில் பயிற்சியும்**

கௌரவ தலைவர் அவர்களே,

இலங்கையர்களிடம் இருக்கும் வரலாற்று ரீதியிலான வியாபார நிபுணத்துவத்தை பயன்படுத்தி தொழில்துறை சுவர்க்கபுரியொன்றை மீண்டும் நாட்டுக்குள் கட்டியெழுப்புவாதற்கான பயணத்தின் முக்கிய பணியொன்றை மத்திய மாகாணம் என்ற வகையில் நாமும் நிறைவேற்ற வேண்டியுள்ளது.

2017ஆம் ஆண்டில் தேசிய இலக்காக இருந்த 10 லட்சம் தொழில் வாய்ப்புகளுக்கேற்ப தொழில் மற்றும் தொழிற்றுறை அபிவிருத்தி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அபிவிருத்தி துறைகளில் உள்நாட்டு வெளிநாட்டு தொழிற் சந்தைகளை இலக்காகக் கொண்டு தொழிலற்ற இளைஞர் யுவதிகள் 2044 பேருக்கு தொழிற் பயிற்சி வழங்கக்கூடியதாக இருந்தது.

அதே போல பரம்பரை தேசிய கைத்தொழில் முயற்சியாளர்கள் மற்றும் அந்த கிராமங்களை கட்டியெழுப்புவதற்கான வேலைத் திட்டங்களைப் போன்று தரத்தை கூட்டும் வேலைத்திட்டங்களும் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. "சில்ப அபிமனி – 2017 மத்திய மாகாணத்தில் கைத்தொழில் கண்காட்சி தேசிய ரீதியில் வெற்றி பெற்றவர்களுக்கு பாராட்டு விழா, இளம் கைத்தொழிலாளர்களின் ஆக்கத் திறன் மதிப்பீட்டு வேலைத்திட்டம் போன்றவற்றின் மூலம் அவர்களை ஊக்குவிப்பதற்கும் பரம்பரை உற்பத்திகளை உள்நாட்டு வெளிநாட்டு சந்தை வாய்ப்பை பெற்றுக்கொடுக்கக் கூடிய நடவடிக்கைகள் இந்த வருடத்தில் செய்யக் கூடியதாக இருந்தது.

இதற்கு மேலதிகமாக வியாபாரத்துறை மேம்பாட்டிற்காக வெளிநாட்டு தொழிநுட்ப பரிமாற்று வேவைலத்திட்டம், நவீன முறை இயந்திர உபகரணங்களை அறிமுகம் செய்தல், தொழிற்துறை அபிவிருத்தி மற்றும் அவர்களை ஊக்குவிப்பதற்காக நட்சத்திரப் பரிசுகளை வழங்கி மதிப்பீடு செய்யவும் நடவடிக்கை எடுக்கப்பட்டது. இவற்றிற்காக 9 மி.ரூபா இந்த வருடத்தில் செலவழிக்கப்பட்டதுடன் மத்திய அரசின் மூலம் தொழில் மற்றும் தொழில் வாண்மைத்துறையின் அபிவிருத்தியின் மூலம் கிராப்பிரதேசம் மற்றும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேசிய இலக்காகக் கொண்ட "என்ட பிரைசஸ் ஸ்ரீ லங்கா" வேலைத்திட்டம். 2018 தேசிய வரவு – செலவு திட்டத்தில் அறிமுகம் செய்யப்பட்டிருப்பதுடன் அதன்படி மத்திய மாகாணம் என்ற வகையில் நாமும் அதற்கு உட்பட வேண்டும்.

2018ஆம் ஆண்டிற்காக மத்திய அரசின் தேசிய வேலைத்திட்டத்துடன் மத்திய மாகாண கைத்தொழில் அபிவிருத்தி வியாபார மேம்பாடு மற்றும் தொழில் பயிற்சி வேலைத்திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்காக 20 மி.ரூபாவை ஒதுக்கித்தர முன்மொழிகிறேன்.

நெசவுக் கைத்தொழில் அபிவருத்தி

கௌரவ தலைவர் அவர்களே,

தேசிய புடவைக் கைத்தொழிலை வளர்ப்பதற்கான செயல் முறைகளை இனங்கண்டு அதற்காக திட்டமிடப்பட்ட வேலைத்திட்டங்கள் 2017ஆம் ஆண்டில் செயல்படுத்தப்பட்டுள்ளன. இந்த வருடத்திலும் இரெண்டாவது காலாண்டுக்குள் உற்பத்தி செய்யப்பட்ட கைத்தறிப்புடவைகள் 128,083 மீட் (ஒரு இலட்சத்து இருபத்தெட்டாயிரம்) என்பதுடன் அதன் பெறுமதி 60 மில்லியன் ரூபாவாகும். இதுவரை உற்பத்தி விற்பனையின் மூலம் 50 மி.ரூபா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலாபம் கிடைாத்துள்ளதுடன் கைத்தறியாளர்கள் 1000 பேர் இத்துறையில் சேவையிலீடுபட்டுள்ளனர்.

இத்தறையின் பௌதீக வளங்களை அதிகரித்தல், உற்பத்தி, மேம்பாடு. சந்தை மேம்பாடு போன்று மனித வளத்தை இலக்காக்கொண்டு தர அபிவிருத்தி வேலைத்திட்டங்களும் நடத்தப்பட்டுள்ளதுடன், இதற்காக 2017ஆம் வருடத்திற்காக 5 மி.ரூபா செலவழிக்கப்பட்டது.

ஏற்றுமதி மாதிரி கைத்தொழிலாக மத்திய மாகாணத்திற்குள் நெசவுக் கைத்தொழில் அபிவிருத்திக்காக மத்திய அரசின் நடுவன் அமைச்சின் மூலம் 8.மி.ரூபா ஒதுககித் தரப்பட்டு வழங்கிய ஒத்துழைப்பினை நன்றியுடன் நினைவு கூற வேண்டும். பாவணையாளர்களின் தேவைகளை முறையாக இனங்கண்டு அதற்கேற்றவாறு புடவைகளை உற்பத்தி செய்வதும் சந்தை மேம்பாடு மனித வள இலக்குகளை அடைவதற்காக முயற்சிப்பதும் இங்கு முக்கியமானது என குறிப்பிடுகிறேன்.

மக்கள் மத்தியில் தேசிய புடவை உற்பத்திகளை பாவிப்பதை ஊக்குவித்து சந்தைப் பங்குகளை அதிகரித்துக் கொள்வதற்காகவும் நெசவுக் கைத்தொழில் துறையில் சேவை செய்யும் தொழிவலாளர்களின் வருமான மட்டத்தை உயர்த்துவதையும் மேற்கொள்ள வேண்டியுள்ளது. இதற்காக பௌதீக உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்வதுடன் மனித வள



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அபிவிருத்தியையும் துரிதப்படுத்த வேண்டும். இந்தச் செயல்பாடுகளை தொடர்ந்து செய்வதன் மூலம் மத்திய மாகாணத்தின் நெசவுக்கைத்தொழில் துறையின் முன்னேற்றத்திற்காக 2018ஆம் ஆண்டில் 8.மி.ரூபாவை ஒதுக்கீடு செய்ய முன்மொழிகிறேன்.

## இளைஞர் விவகார அபிவிருத்தி

பொதுவாக எடுத்து நோக்கும் பொழுது வருடாந்தம் தொழில் துறைக்குள் சேரும் இளைஞர்களை சேவையிலீடுபடுத்து கூடுவது சவாலாக அமைந்துள்ளது. மக்கள் புள்ளிவிபரத் திணைக்களத்தின் புள்ளி விபரத்தின்படி 2016ஆம் ஆண்டில் மத்திய மாகாணத்தின் தொழிலற்றவர்களின் எண்ணிக்கை 5.1% மென நான் முதலில் குறிப்பிட்டேன். இத்தொகையில் 51.8% மானோர் 15ற்கும் 24ற்கும் இடைப்பட்ட வயதுக்குட்பட்டஇளைஞர்களாக இருப்பது விசேசமாகும். இளைஞர்களை பொருளாதார ரீதியில் வலுவுள்ளதாக்குவது மட்டும் போதாது என்பது நாம் அனைவரும் ஏற்றுக்கொள்ளும் உண்மையாகும். இளைஞர்களிடம் இருக்கும் உயர்மட்ட தொழிற்றிறமையைப் போல தரமான கலாசச்சாரக் கொள்கைகளை மேலும் பாதுகாத்துக் கொள்வதற்கான வேலைத்திட்டங்கள் பல 2017ஆம் ஆண்டிற்குள் எம்மால் இனங்கானப்பட்டு செயல்படுத்தப்பட்டுள்ளது. இதன் கீழ் இளைஞர் யுவதிகளை ஒன்று சேர்த்தல் இளம் செயல்பாட்டாளர்களை ஒரு குழுவாக்குதல். இளைஞர் சமூகத்தினரிடையே தேசிய ஒற்றுமையை வளர்த்தல்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொழில் வாய்பபுகளை இலக்காகக் கொண்டு அவர்களைப் பயிற்றுவித்தல், மொழித் திறன் வளர்ச்சி, போதைப் பொருள் பாவனைத் தடுப்பு வேலைத்திட்டங்களை நடைமுறைப்படுத்துதல். தோட்டப்புற இளைஞர்யுவதிகளை தொழில் சந்தைக்காக ஈடுபடுத்துதல் போன்ற வேலைத்திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டதுடன் அதற்காக 4 மி. ரூபாவை நாம் செலவழித்துள்ளோம்.

இவற்றை மேலும் முன்னெடுத்துச் செலுத்துவதற்காக 2018ஆம் ஆண்டில் 5 மி.ரூபாவை ஒதுக்க முன்மொழிகிறேன்.

**விளையாட்டு அபிவிருத்தி**

கௌரவ தலைவர் அவர்களே,

மத்திய மாகாணத்தின் வீர வீராங்களைகளின் திறமைகளை மேம்படுத்தி அவர்களை தேசிய மற்றும் சர்வதேச மட்டத்திற்கு கொண்டு செல்வது எமது பிரதான நோக்கமாகும். இதற்காக விளையாட்டுத் துறைக்குத் தேவையான பௌதீக மற்றும் மனிதவள அபிவிருத்தி வேலைத்திட்டங்களை திட்டமிட்டு செயல்படுத்தியுள்ளேம். அதன் பெறுபேறாக 2017 ஆம் ஆண்டில் தேசிய விளையாட்டுத் துறைக்குத் தேவையான பௌதீக மற்றும் மனித வள அபிவிருத்தி வேலைத்திட்டங்களை திட்டமிட்டு செயல்படுத்தியுள்ளோம். அதன் பெபேறக 2017ஆம் ஆண்டில் தேசிய விளையாட்டு விழாவில் நடந்த போட்டிகளில் 46 தங்கப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பதக்கங்களும் 41 வெள்ளிப் பதக்கங்களும் 45 வெண்கலப் பதக்கங்களும் வெற்றி பெற்று இரெண்டாம் இடத்தைப் பெற்றுக்கொள்ளக்கூடியதாக எமக்கு இருந்தது. மாகாணத்திற்குப் பெற்றுக்கொடுத்த இந்த வெற்றியை நான் பெரிதும் மதிக்கிறேன்.

பொது மக்களின் உடற்பயிற்சி மற்றும் ஓய்வு நேர செயல்பாடுகளுக்காக 2017ஆம் ஆண்டிற்குள் முக்கிய கவனமெடுக்கப்பட்டதுடன் முதல் வரிசை விளையாட்டு வேலைத்திட்டம் மற்றும் விளையாட்டு குழுக்கள், மாவட்ட பயிற்சி நிலைய அபிவிருத்திக்காகவும் நடவடிக்கை எடுத்துள்ளோம் இவை அணைத்திற்கும். 2017ஆம் ஆண்டில் 8 மி.ரூபா ஒதுக்கப்பட்டது.

2018ஆம் ஆண்டிலும் இந்த செயல்பாடுகளுக்காக 15 மி.ரூபாவை ஒதுக்க முன் மொழிகிறேன். கிராம மட்டத்தில் விளையாட்டு கழகங்களை ஊக்குவிப்பதன் மூலம் மாகாணத்தில் நோயற்ற செயல்திறன் மிக்கவர்களை உருவாக்க செயல்படுமாறு நான் சம்பந்தப்பட்டவர்களை கேட்டுக்கொள்கிறேன்.

**கிராம அபிவிருத்தி நடவடிக்கைகள்.**

கிராமத்து மக்களின் சமூக பொருளாதார அபிவிருத்தியை நோக்காகக் கொண்டு கிராம அபிவிருத்தித் திட்டங்கள் மத்திய மாகாணத்திற்குள் முக்கியமான செயல்பாடுகளை நிறைவேற்றுகின்றது. கிராம உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிராம சமூக பொருளாதார அபிவிருத்தி, கிராம அபிவிருத்தி சங்க வேலைத்திட்டங்களை வலுவூட்டுதல் போன்று ஆளணியினர்களின் தரமேம்பாட்டினை இலக்காகக் கொண்டு வேலைத்திட்டங்கள் பல 2017ஆம் வருடத்திற்குள் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. இதற்காக 8 மில்லியன் ரூபா முதலீடு செய்யப்பட்டுள்ளது.

மத்திய மாகாணத்தில் புதிய கிராம அபிவிருத்திச் சங்க யாப்பொன்றை அறிமுகப்படுத்தியன் மூலம் மாகாண மெங்கும் 2238 சங்கங்களை ஊக்குவித்துள்ளமை மகிழ்ச்சிக்குரிய விடயமாகும். பிரதேச அதிகார சபைகள் 36உம் தொடர்ச்சியாக செயல்பட்டு மத்திய மாகாணத்தைப் போன்று மத்திய அரசின் அபிவிருத்தி செயல்பாடுகளுக்கு அவர்களின் பங்களிப்பினை வழங்குவது மதிக்கப்பட வேண்டிய தொன்றாகும்.

கிராம பொருளாதார உட்கட்டமைப்பு வலசதிகள் அபிவிருத்தியைப் போன்று சமூக அபிவிருத்தியும் நிறைவேற்றப்படும் செயல்களை மேலும் பரவலாக நடைமுறைப்படுத்துவதற்கு 2018ஆம் ஆண்டிற்காக 20 மி. ரூபாவை ஒதுக்க முன் மொழிகிறேன். அதே போல இந்த கிராம மட்டத்திலான சங்கங்களை ஊக்குவித்து அக்கிராமங்களின் வளங்களை பிரதேசத்தின் மக்களுக்காக பயன்படுத்துவது பற்றி மிகுந்த கவனமெடுக்குமாறும் நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**மகளிர் விவகார நடவடிக்கைகள்.**

கௌரவ தலைவர் அவர்களே,

மத்திய மாகாணத்து மொத்தமக்கள தொகையில் பெண்கள் 52.15% மாகும். அதே போல இதில் 7.0% மானோர் தொழில் இல்லாத நிலையில் உள்ளனர். மக்கள் புள்ளிவிபர திணைக்களத்தின் 2016ஆம் ஆண்டின் திட்டமிடப்பட்ட சனத்தொகைக்கேற்ப மத்திய மாகாணத்தின் பெண்களின் எண்ணிக்கை 1,403,000 பெண்களை பொருளாதாரம் மற்றும் சமூக ரீதியில் ஊக்குவிப்பதற்காக வேலைத்திட்டங்கள் பல 2017ஆம் ஆண்டில் நடைமுறைப்படுத்தப்பட்டது. கிராமம், நகரம் மற்றும் தோட்டத்துறைகளில் பெண்கள் தொழில் வாண்மையாளர்கள் 8000 பேருக்கு அதிகமானோர் பல்வேறு பயிற்சிகளையும் தொழில்களையும் நடத்திச் செல்லத்தேவையான உபகரணங்கள் வழங்கப்பட்டு ஊக்குவிக்கப்பட்டுள்ளனர். புடவைகளை தைத்தல், தொழிலிலீடுபட்டுள்ள தொழில் வாண்மையாளர்களுக்கு தொழிநுட்பம் மற்றும் வியாபார முகாமைத்துவம் என்பதோடு எண்ணக் கருவிருத்தி பயிற்சிகள் வழங்கப்பட்டு உள்ளது அவர்களது தொழிலுக்குத் தேவையான தையல் இயந்திரங்கள் 501னை அரசியல் தலைமைகளோடு இணைந்து வழங்குவதங்கு ஏற்றதாக இருந்தமை இந்த வருடத்தில் நாம் பெற்ற வெற்றியாகும் பெண்களை ஊக்குவிப்பதற்காக பல்வேறு வேலைத்திட்டங்கள் மற்றும் செயல்பாடுகள் 219 மத்திய மாகாணத்திற்குள் நடைமுறைப்படுத்தியுள்ளதுடன். அதன் மூலம் 16000 பெண்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நன்மை பெற்றுள்ளனர். இதற்காக 2017ஆம் ஆண்டில் 4 மி.ரூபாவை நாம் முதலீடு செய்துள்ளோம்.

பெண்கள் சங்கங்களை செயல்படத்தூண்டி மகளீர் அபிவிருத்திக்கு புதிய வழிகளைக் காட்டுதல். பெண்களை பொருளாதார, தொழிநுட்ப, சமூக ரீதியில் ஊக்குவித்தல், ஆலோசனை சேவை செயல் திட்டங்களுக்கேற்ப சட்டம் மற்றும் உள ரீதியிலான ஆலோசனை, போதையற்ற குடும்ப அலகுகளை தோற்றுவிப்பது பற்றி விளக்கமளித்தல், சிறுவர் துஸ்பிரயோகமும் பெண்கள் கொடுமைகளை குறைத்தல். பற்றி விளக்கமளித்தல் மற்றும் லியசெவன நிலையங்களின் உட்கட்டமைப்பு வசதிகளை விருத்தி செய்தல் போன்ற நடவடிக்கைகளின் மேம்பாட்டிற்காக 2018ஆம் ஆண்டில் 7 மி.ரூபாவை ஒதுக்க முன் மொழிகிறேன்.

## மாகாண பாதைகள் அபிவிருத்தி

கௌரவ தலைவர் அவர்களே,

பாதைகள் அபிவிருத்தியின் போது பாதைகளின் மேற்பரப்பை மேம்படுத்துவது போன்று பாதைகளின் கட்டமைப்பை வகையிப்படுத்தி நடத்திச் செல்வது அத்தியாவசிய செயலாகும். 2017ஆம் ஆண்டில் மாகாண பாதைகள் அபிவிருத்திக்காக 190 மி. ரூபாவில் 59 பாதைகள் அபிவிருத்தி வேலைத்திட்டத்தின் மூலம் நிர்மான வேலைகள் செய்யப்பட்டுள்ளன. மேலும் நடுவன் அரசின் நிதி ஒதுக்கீட்டின் கீழ் 45.0 மி.ரூபா செலவழித்து மாகாண



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாதைகள் அபிவிருத்தி வேலைத்திட்டங்களட 4னை செயலடபடுத்தவும் 2017 ஆண்டிற்குள் நடவடிக்கை எடுக்கப்பட்டது. மத்திய மாகாணத்திற்கு சொந்தமான C மற்றும் D தரத்து பாதைகள் 2243 கி.மீட்டர் சிறந்த முறையில் நடத்தப்படுவதற்கு தார் போட்டு பாதைத் கட்டமைப்பை அபிவிருத்தி செய்தல் பாதைகளின் கரைகளை நிர்மானித்தல், மண்சரிவு மற்றும் இயற்கை இடையூறுகள் காரனமாக உடைந்து போகும் பாதைகளைப் பழுதுபார்த்தல் மற்றும் பராமரித்தல் என்பன இந்த வருடத்தில் மேற்கொள்ளப்பட்டதுடன் இங்கு குறிப்பிட்ட வேலைகளை தொடர்ச்சியாக நிறைவேற்றுவதற்காக 2018 ஆண்டுக்கு 425 மி.ருபாவை ஒதுக்க முன் மொழிகிறேன். இந்தத் தொகை 2017 ஆண்டோடு ஒப்பிடுகையில் இரெண்டு மடங்குக்கு அதிகமாகி உள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவிக்க விரும்புகிறேன். அதே போல ஒதுக்கப்பட்ட நிதிக்கு மேலதிகமாக மாகாண பாதைகள் அபிவிருத்தி அதிகார சபையின் நிதியும் பயன்படுத்தப்பட்டு சம்பந்தப்பட்ட நியதிச்சட்டங்களுக்கு ஏற்ப மாகாணத்தின் சமூக, பொருளாதார அபிவிருத்திக்கான அபிவிருத்தி வேலைத்திட்டங்களை நடைமுறைப்படுத்துமாறும் கேட்டுக்கொள்கிறேன்.

**கிராம மின்சாரம் மற்றும் மாற்று எரிபொருள் அபிவிருத்தி**

எரிபொருள் பாதுகாப்பு மற்றும் மாற்று எரிபொருள் பாவனையை அதிகரிக்கும் நோக்கில் மத்திய மாகாணத்தின் பாடசாலை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிள்ளைகள் மற்றும் சமூகத்தவர்களை தெளிவுபடுத்துதல். அரச நிறுவனங்களில் எரிபொருள் கணக்காய்வு வேலைத்திட்டங்களை நடைமுறைப்படுத்துதல் மற்றும் எரிபொருள் செயல்திறன் மற்றும் மாற்று எரிபொருள் மேம்பாட்டிற்காக புதிய நிர்மானப் போட்டிகள் (e-Inno 2016,2017) மற்றும் சூரிய சக்தியை உற்பத்தி செய்யும் திட்டங்களை நடைமுறைப்படுத்துதல் போன்ற வகையில் மின்சாரம் மற்றும் மாற்று எரிபொருள் அபிவிருத்தி வேலைத் திட்டங்கள் 55னை 5மி.ரூபா செலவழித்து மத்திய மாகாணம் முழுவதும் நடைமுறைப்படுத்துவதற்கு 2017 ஆம் ஆண்டில் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இதற்கு மேலதிகமாக மென் பொருள் எரிபொருள் அதிகார சபையின் ஒத்துழைப்டன் (NAMA) திட்டத்தின் கீழ் மத்திய மாகாணத்திற்குள் ஜீவவாயு பிரிவுகள் 65 ஐ நிர்மானிக்கும் நடவடிக்கைகளை 2017ஆம் ஆண்டில் நடைமுறைப்படுத்துவதற்கு ஏற்றதமாக இருந்தது இதற்காக மென்பொருள் எரிபொருள் அதிகார சபையினால் 4 மி.ரூபா ஒதுக்கப்பட்டிருந்தது.

தற்போதுள்ள எரிபொருள் முறைகளும் மாற்று எரிபொருள் முறைமைகளுடாக மத்திய மாகாணத்தில் விசேடமாக கிராம மக்களின் எரிபொருள் தேவைகளை திருப்திப்படுத்துவதற்கு கவனம் செலுத்த வேண்டியுள்ளது. விசேசமாககிராம மின்சார வசதிகளை அதிகரிக்கவும் இந்த வருடத்தில் நடைமுறைப்படுத்தப்பட்ட நன்மைமிகு வேலைத்திட்டங்கள் 2018ஆம் ஆண்டிலும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடைமுறைப்படுத்தப் படுவதற்காக 15மி. ரூபாவை ஒதுக்க முன் மொழிகிறேன்.

**பயணிகள் போக்குவரத்து சேவைகள் அபிவிருத்தி**

மத்திய மாகாண மக்களின் பொது போக்குவரத்து தேவைகளை திருப்திகரமாகவும் செயல் திறனுடனும் சிறந்த முறையிலும் நிறைவேற்றுவதற்காக பயணிகள் போக்குவரத்து துறைக்குரிய உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்வதற்காக 2017ஆம் ஆண்டில் பல வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன. அதன்கீழ் பஸ் நிறுத்துமிட அபிவிருத்தி, பயணிகள் தங்குமிட, நிர்மானம் மற்றும் பஸ் நிறுத்துமிட சுக நலன் பாதுகாப்பு வசதிகள் அபிவிருத்தி போன்ற செயல் திட்டங்கள் 16னை 8.0மி.ரூபா செலவில் செயல்படுத்தப்பட்டுள்ளன. மத்திய மாகாண பயணிகள் போக்குவரத்து துறையினை முறையாக புணரமைப்பு செய்து "சஹசர" மாதிரி வேலைத்திட்டம் மத்திய மாகாணத்தில் தெரிவு செய்யப்பட்ட பிரதேசங்களில் நடைமுறைப்படுத்துவதற்கு எம்மால் முடிந்தது. தேசிய ரீதியில் அறிமுகப்படுத்துவதற்கு இருந்த இந்த திட்டத்தின் ஆரம்ப நடவடிக்கைகள் மத்திய மாகாணத்திற்குள் மாதிரித் திட்டமாக செயல்படுத்தக்கூடியதாக இருந்தமை எமது மாகாணம் பெற்ற கௌரவமென குறிப்பிட விரும்புகிறேன். அடுத்த வருடத்தில் பயணிகள் போக்குவரத்து அபிவிருத்திக்காக 20 மி.ரூபாவை ஒதுக்க முன் மொழிகிறேன். பயணிகளின் வசதிகளையும் கௌரவத்தையும் பாதுகாக்கும் விதத்தில் தனியார் பஸ் போக்குவரத்திற்குரிய மனித வளத்தை அபிவிருத்தி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்வதற்குத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டியது அத்தியாவசியமானது என குறிப்பிடுவதுடன் அதற்குத் தேவையான நடவடிக்கைகளை சிறந்த முறையில் பயன்படுத்துமாறும் முன் மொழிகிறேன்.

அதேபோல தற்போது இந்த நிறுவனத்தினால் ஈட்டப்படும் பணத்தில் நிறுவன ஊழியர்களுக்கு சம்பளம் கொடுத்தல் முறையில் நிலையான நிதி நிலைமை காணப்படவில்லை என்பது இந்த நிறுவனத்தின் அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கு தடையாக இருப்பது முக்கிய பிரச்சினையாக இனங்கானப்பட்டுள்ளது. இலங்கையின் ஏனைய மாகாணங்களைப் போல அனுமதிக்கப்பட்ட ஆனணியினர்களுக்கு சம்பளத்திற்குத் தேவையான பணம் நிறுவனத்துடன் கலந்துரையாடப்பட்டு 2018ஆம் ஆண்டில் தீர்த்து வைக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமென முன் மொழிகிறேன்.

**மாகாண வீடமைப்பு அபிவிருத்தி.**

மாகாணத்தின் சகல குடும்பப் பிரிவுகளுக்கும் தங்களுக்கே உரிய வீடொன்றில் வாழ்வதற்குத் தேவையான உதவியை வழங்குவது மாகாண வீடமைப்பு திணைக்களத்தின் கடமையாகும். அதன்படி மாகாணத்தில் குறைந்த வருமானமுடையவர்களுக்கு வீடொன்றை நிர்மானித்துக் கொள்வதற்காக பொருள் உதவி வழங்குதல், நிதியுதவி வழங்குதல், குறைந்த செலவில் வீடொன்றை நிர்மானித்துக்கொள்வதற்கான வழிகாட்டல் போன்ற



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேலைத்திட்டங்கள் மாகாணம் முழுதும் செயல்படுத்தப்படுவதுடன். 2017ஆம் ஆண்டில் அதற்காக 3 மி.ரூபா ஒதுக்கப்பட்டதுடன். அதன் கீழ் 136 திட்டங்களை நடைமுறைப்படுத்த நவடிக்கை எடுக்கப்பட்டது. இதை 2018ஆம் ஆண்டிலும் நடைமுறைப்படுத்த எதிர்ப்பார்ப்பதுடன் வீடு அர்பணிப்பு முறையினை மேம்படுத்தும் நோக்கில் மாகாண வீடமைப்பு வார வேலைத்திட்டத்தை. 2018ஆம் ஆண்டிலும் நடைமுறைப்படுத்துவதற்கு எதிர்ப்பார்க்கிறேன். அதன்படி மாகாணத்தில் சம்பந்தப்பட்டவர்களின் வீட்டுத் தேவை அபிவிருத்திக்காக 2018 ஆம் ஆண்டிற்காக 8.மி.ரூபா ஒதுக்குவதற்கு முன் மொழிகிறேன்.

இவ்வாறு வீடமைப்பு உதவி வழங்குவதற்கு மேலதிகமாக அந்த நன்மை பெறுபவர்களின் வீடுகள் நிர்மானிப்பதற்கும் அவர்களது சமூக பொருளாதார அபிவிருத்திக்காகவும் மாகாண அரசும் அரச சார்பற்றவர்களினதும் ஒத்துழைப்பைப் பெற்றுக்கொண்டு அக்குடும்ப அலகுகளைப் பாதுகாக்கவும் நடவடிக்கை எடுக்குமாறு நான் சம்பந்தப்பட்ட நிறுவனங்களிடம் கேட்டுக்கொள்கிறேன்.

**மாகாண போக்குவரத்து நடவடிக்கைகள் அபிவிருத்தி.**

கௌரவ தலைவர் அவர்களே,

மாகாணத்தின் வாகனங்களுக்காக வருமான அனுமதிப்பத்திரம் வழங்குவதை முக்கிய பொறுப்பாக்கிக் கொண்டுள்ள மாகாண போக்குவரத்துத் திணைக்களம் "e" அரச கொள்ளைகளை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வலுப்படுத்திக் கொண்டு வாகன வருமான அனுமதிப்பத்திரத்தை online மூலமாகப் பெற்றுக்கொள்ளத் தேவையான வசதிகள் ERL (Electronic Revenue License) வேலைத்திட்டத்தின் கீழ் சேவை பெருநர்களுக்கு வழங்கும் சந்தர்ப்பத்தை ஏற்படுத்திக் கொடுத்துள்ளது இது மாகாண சபை பெற்றதொரு வெற்றியாவதுடன் சேவை நலன் பெருநரின் வசதிகளை ஆகக்கூடியவிதத்தில் பெற்றுக்கொண்டு அவர்களையும் திருப்திப்படுத்த இப்படியான வேலைத்திட்டங்கள் மிகவும் உந்துசக்தியாக உள்ளதென குறிப்பிடுகிறேன். இத்திட்டத்தை இன்னும் திறம்பட செய்வதற்காக பிரதேச காரியாலயங்களின் அத்தியாவசிய உட்கட்டமைப்பு வசதிகளை அதிகரித்தல், வாகன தகைமைச் சான்றிதழ்களை விநியோகிக்கும் கராஜுகளின் தரத்தை மேம்படுத்தும் வேலைத்திட்டங்கள் நடைமுறைப்படுத்துவது போன்ற செயல் திட்டங்கள் 8ஐ 2 மி.ரூபா செலவழித்து 2017ஆம் ஆண்டில் செயல்படுத்தக் கூடியதாக இருந்தது. இத்திட்டங்களை 2018ஆம் ஆண்டிலும் பரவலாக மேற்கொள்ள எதிர்ப்பார்ப்பதுடன் பாதை விபத்துக்களை குறைத்துக்கொள்ளும் நோக்கில் பாடசாலை மாணவர்கள் மற்றும் சமூகத்தவர்களுக்குத் தெளிவூட்டும் வேலைத்திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது. அதன்படி மாகாணத்தின் போக்குவரத்து நடவடிக்கைகள் அபிவிருத்திக்காக 5 மி ரூபாவை ஒதுக்கித்தர முன் மொழிகிறேன்.

ஒவ்வொரு அமைச்சின் கீழும் நடைமுறைப்படுத்தப்படும் அபிவிருத்தி வேலைத்திட்டங்கள் பற்றி நான் இதுவரை உங்களுக்கு தெளிவு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படுத்தினேன். இச்சந்தர்ப்பத்தில் மாகாணத்தின் சமூக பொருளாதார அபிவிருத்திக்காக பிரதான செயலாளர் காரியாலயத்தின் கீழ் திட்டமிடல், முன்னேற்ற நிர்வாகப் பிரிவினால் மாகாண அமைச்சுக்கள், திணைக்களங்கள், நிறுவனங்களால் நடைமுறைப்படுத்தப்படும் அபிவிருத்தி வேலைத்திட்டங்களுக்குரிய கருத்துக்களை காட்டுவதற்கு எதிர்ப்பார்க்கிறேன்.

**பன்முகப்படுத்தப்பட்ட வரவு – செலவு வேலைத் திட்டங்கள்**

கௌரவ தலைவர் அவர்களே,

இந்த வேலைத்திட்டத்தின் கீழ் மாகாணத்தின் கௌரவ உறுப்பினர்களுக்காக 2.5. மில்லியன் ரூபா வீதம் 2017ஆம் ஆண்டு ஒதுக்கப்பட்டிருந்த 145 மி.ரூபா ஒதுக்கீட்டின் கீழ் மாகாண மக்களின் பொருளாதார, சமூக, மதம் மற்றும் கலாச்சார நடவடிக்கைகள் மேம்பாட்டிற்குத் தேவையான பௌதீக உட்கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்துதல் மற்றும் மேம்படுத்துதல் போன்று சமூக சுக நலனை இலக்காகக் கொண்ட வேலைத்திட்டங்கள் வெற்றிகரமாக நடைமுறைப்படுத்தப்பட்டன.

இதன் அடிப்படையில் கண்டி மாவட்டத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் கௌரவ உறுப்பினர்கள் 22 பேருக்காக ஒதுக்கப்பட்ட 72.5 மி.ரூபாவும், மாத்தளை மாவட்டத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் கௌரவ உறுப்பினர்கள் 12 பேருக்காக ஒதுக்கப்பட்ட 30 மி. ரூபாவும் நுவரெலிய மாவட்டத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் கௌரவ உறுப்பினர்கள் 17 பேருக்காக ஒதுக்கப்பட்ட 42.5



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மி.ரூபாவும் என 145 மி.ரூபாவைப் பயன்படுத்தி மாகாண மக்களின் வாழ்க்கையை உயர்த்துவதற்குத் தேவையான வேலைத்திட்டங்கள் நிறைவேற்றப்பட்டன.

2018ஆம் ஆண்டில் கௌரவ உறுப்பினர்களின் பன்முகப்படுத்தப்பட்ட நிதி ஒதுக்கீட்டு வேலைத்திட்டங்களை மாகாணத்திற்குள் நடைமுறைப்படுத்துவதற்காக 145 மி.ரூபாவை ஒதுக்கித்தர முன் மொழிகிறேன். இந்த நிதியை முதலீடு செய்யும் போது சம்பந்தப்பட்ட விதிமுறைகளுக்கிணங்க மக்களின் தேவைகளுக்கிடையில் கூடிய முன்னுரிமை அடிப்படையிலும் பயனுள்ளதானதுமான வேலைத்திட்டங்களை தெரிவு செய்வது சகல மக்கள் பிரதிநிதிகளினதும் பொறுப்பாகுமென்பதை ஞாபகப்படுத்த விரும்புகிறேன்.

**விசேட பொருளாதார உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி வேலைத்திட்டம்.**

அதிமேதகு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அவர்களுட்பட நல்லாட்சி அரசின் முக்கிய பணியாக இனங்கானப்பட்ட "வறுமை நிலையைப்போக்கும் வருடம் - 2017" வேலைத்திட்டதிற்கேற்ப மத்திய மாகாணத்திற்குள் எதிர்ப்பார்க்கும் நோக்கத்திற்கான கூடிய ஒத்துழைப்பை வழங்கி 145 ரூபா மூவதன முதலீட்டில் இந்த வேலைத்திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டன. இதுவரை பண்முகப்படுத்தப்பட்ட வேலைத்திட்டத்தின் கீழ் கௌரவ மாகாண



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சபை உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்ட 2.5 மி.ரூபா ஒதுக்கீடு இந்த வேலைத்திட்டங்களுடன் இரண்டு மடங்காகி உள்ளதுடன் இதன் மூலம் தமது அதிகாரப் பிரதேசங்களின் மக்களின் தேவைகளை நிறைவேற்றுவதற்கு பாரிய ஒத்துழைப்பை வழங்கக்கூடியதாக இருந்ததென்பதையும் குறிப்பிட விரும்புகிறேன்.

விசேச பொருளாதார உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி வேலைத்திட்டத்தின் கீழ் விவசாயம் மற்றும் ஏனைய பாதைகள் அபிவிருத்திக்காக 73 மி.ரூபா முதலீடு செய்து 124 வேலைத்திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டன. தற்போதிருக்கும் தொழில் விருத்திகளைப் போன்று புதிய தொழில் துறைகள் ஆரம்பிக்கப்படவுள்ளதான தொழில்துறை அபிவிருத்தி வேலைத்திட்டங்கள் 40 மி.ரூபா செலவில் 56 வேலைத்திட்டங்கள் நடைமுறைப்படுத்ததப்பட்டன. இதில் சுயதொழில் மற்றும் சிறு தொழிலை ஆரம்பித்தல், மேம்படுத்தலுக்குத் தேவையான தொழில் பயிற்சிகளுடன் அத்தொழிலை முன்னெடுத்து செல்வதற்கு தேவையான இயந்திரங்கள், உபகரணங்களை வழங்கக்கூடியதாக இருந்தமை நாம் பெற்ற பாரிய வெற்றியாகும் என்பதையும் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

இந்த வேலைத்திட்டங்களுக்குள் தொழில் கல்வியைப் போன்று இனங்கானப்பட்ட கைத்தொழில் துறைகளுக்கான பொது தேவைகளை வழங்கும் மத்திய நிலையமாக பல்லின தேவைகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கட்டட அபிவிருத்திக்காக 20 மி.ரூபா செலவழித்து 29 வேலைத்திட்டங்கள் செயல்படுத்தப்பட்டன.

இவற்றிற்கு மேலதிகமாக நன்னீர் தேவைகளைப் பூர்த்தி செய்தல், நீர்ப்பாசனத் தொகுதிகளை முன்னேற்றுதல், மின் கம்பிகளை வழங்குதல் போன்று தொழில் தகைமை சார்ந்த மற்றும் நல்ல மனப்பாங்கு அபிவிருத்திக்கான விசேட வேதைல்திட்டங்களுடன் 228 அபிவிருத்தி வேலைத்திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டு மக்களை ஊக்குவிக்கக் கூடியதாக இருந்தது என்பதை மிகவும் மனமகிழ்வுடன் குறிப்பிட விரும்புகிறேன்.

இந்த வேலைத்திட்டங்களின் வெற்றிகளின் பேரில் மாகாண சபையின் சகல கௌரவ உறுப்பினர்களுக்காகவும் 2018ஆம் ஆண்டிற்காக விசேச பொருளாதார உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்யும் வேலைத்திட்டங்களுக்காக 145 மி.ரூபாவை ஒதுக்கித் தர முன் மொழிகிறேன்.

அதன்படி கடந்த வருடத்தைப் போல கௌரவ உறுப்பினர்களுக்கு 2018ஆம் ஆண்டிற்காகவும் பன்முகப்படுத்தப்பட்ட வேலைத்திட்டங்கள் மற்றும் இந்த விசேச பொருளாதார உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி வேலைத்திட்டங்கள் மூலம் அபிவிருத்திக்காக 50 இலட்சம் ரூபாவும் கிடைக்குமென்பதை குறிப்பிட விரும்புகிறேன். இந்த நிதி சம்பந்தப்பட்ட விதிமுறைகளுக்கிணங்க பொறுத்தமான நன்மைபெறுவோரின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அபிவிருத்திக்காக ஒதுக்க நடவடிக்கை எடுக்குமாறு நான் அரசியல் தலைமைகளிடம் கேட்டுக்கொள்கிறேன்.

**பின்தங்கிய மற்றும் தனிமைப்பட்ட கிராமங்களை அபிவிருத்தி செய்தல்.**

கௌரவ தலைவர் அவர்களே,
மத்திய மாகாணத்தில் சமூக பொருளாதார உட்கட்டமைப்பு வசதிகள் குறைவடைதல் அல்லது பல்வேறு சுற்றாடல் மற்றும் சமூக நிலைமைகளினால் பின்னடைவு நிலைமைக்கு உள்ளாகியுள்ள கிராமங்களின் அடிப்படை வசதிகளை மேம்படுத்துவதற்குரிய கிராமப்பாதைகள், சிறு பாலங்கள், போக்கு, நன்னீர் வசதிகள் மற்றும் விவசாய உட்கட்டமைப்பு வசதிகள் போன்ற வேலைத்திட்டங்கள் இதன் மூலம் நடைமுறைப்படுத்தப்பட்டது. 2017ஆம் ஆண்டில் இந்த வேலைத்திட்டத்திற்காக 120 மில்லியன் ரூபா முதலீடு செய்யப்பட்டது. அதன்படி இந்த வேைலத்திட்டத்தின் கீழ்209 அபிவிருத்தி வேலைத்திட்டங்களை செயல்படுத்த எமக்கு முடிந்தது. பின்தங்கிய மற்றும் தனிமைப்பட்ட கிராம அபிவிருத்தி வேலைத்திட்டங்களின் மூலம் அனுபவத்தைப் பெற்றுக் கொண்டு 2018ஆம் ஆண்டில் விசேச தேவைகளுடைய கிராமங்கள் அபிவிருத்தி வேலைத்திட்டங்கள் 200 மி.ரூபா ஒதுக்கப்பட்டு செயல்படுத்த முன் மொழிகிறேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விசேட வேலைத்திட்டங்கள்.

மத்திய மாகாணத்தில் பதிவு செய்யப்பட்ட செயல்திறன்மிகு சமூக அமைப்புகளில் பௌதீக ரீதியில் நிலவும் குறைப்பாடுகளை தீர்த்து மாகாண மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தும் நோக்கில் 2017ஆம் ஆண்டில் இந்த வேலைத்திட்டத்திற்காக 20 மி.ரூபா ஒதுக்கப்பட்டது. இதன் கீழ் மத்திய மாகாணத்தின் சமூக அமைப்புகள் 831ற்கு தேவைக்கேற்ப தண்ணீர் மோட்டார்கள் 66உம் தண்ணீர்த் தாங்கிகள் 393உம் மின்னுற்பத்தி இயந்திரங்கள் 420ஒம் மருந்து தெளிக்கும் இயந்திரங்கள் 37உம் பெற்றுக்கொடுக்க நடவடிக்கை எடுக்கப்பட்டது. வருட ஆரம்பத்தில் ஒதுக்கப்பட்ட நிதி சம்பந்தப்பட்ட உபகரணங்களின் சந்தை விலையும் வரிக் கட்டணமும் சேர்ந்து போதுமானதாக இருக்கவில்லை என்பதால் மேலதிகமாக 3.5 மி.ரூபா அதாவது 23.5 மில்லியன் ரூபா இவ்வாறு பதிவு செய்யப்பட்ட தொண்டர் அமைப்புகளின் தரமேம்பாட்டிற்காக பயன்படுத்தப்பட்டது. இதன் கீழ் சமூகத்தின் நன்மைக்காக சமூகத்தவர்களாலேயே அமைக்கப்பட்டு நடத்தப்படும் சமூக அமைப்புகளின் அத்தியாவசிய பௌதீக வழங்களை இவ்வருடத்தில் பெற்றுக் கொடுக்க முடிந்தமை திருப்திபடக்கூடிய ஒன்று என்று நான் குறிப்பிட விரும்புகிறேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நெகிழ்வான ஒதுக்கீடு

வேறு நிதிப் பிரவாகங்களின் மூலம் ஏற்படுத்திக்கொள்ள முடியாத மாகாணத்தின் அத்தியாவசிய மற்றும் முக்கிய உட்கட்டமைப்பு வசதிகளையும் அபிவிருத்தித் திட்டங்களுக்கும் இந்த நிதிபயன்படுத்தப்பட்டது. இதன் கீழ் 2017ஆம் ஆண்டிற்காக 12 மி.ரூபா ஒதுக்கப்பட்டதுடன் அதன் மூலம் 25 வேலைத்திட்டங்கள் வெற்றிகரமாக முடிக்கப்பட்டது. இந்த வேலைத்திட்டங்கள் மாகாணத்தின் தேவைகளுக்கேற்ப நடத்தப்படுவதற்காக 2018ஆம் ஆண்டிற்காக 56 மி.ரூபாவை ஒதுக்கிர முன்மொழிகிறேன்.

நான் இதன் பின் சம்பந்தப்பட்ட ஏனைய நிறுவணங்களின் நடவடிக்கைகள் பற்றி கருத்துத் தெரிவிக்க நினைக்கிறேன்.

## வலய பொருளாதார மேம்பாட்டு நிறுவனம் (REDA)

கௌரவ தலைவர் அவர்களே,

மத்திய மாகாண சபையின் 2008இலக்கம் 1ஐக் கொண்ட நியதிச் சட்டத்தின் மூலம் ஸ்தாபிக்கப்பட்ட வலய பொருளாதார அபிவிருத்தி நிறுவனம் (REDA) அரச மற்றும் தனியார் பிரிவுகளின் உச்சகட்ட ஒத்துழைப்பைப் பெற்றுக்கொண்டு பிரதேசத்தின் பொருளாதாரத்தை உயர்த்துவதற்குத் தேவையான பின்னணியை உருவாக்குவதற்கான விடயங்களை நிறைவேற்றியுள்ளது. அதன்படி மத்திய மாகாணத்தில் முதலீட்டு மேம்பாடு, வலயத்தின், சிறு, மத்திய. மகா பரிமான வேலைத்திட்டங்களைப் போல அரசினதும் தனியாரினதும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒத்துழைப்பு அபிவிருத்தி வேலைத்திட்டங்களை நடைமுறை படுத்தப்படுகிறது. மேலும் மத்திய மாகாணத்திற்குள்ளும் அதற்கு வெளியேயும் பல்வேறு சேவைகைளோடு தொடர்புபடுத்தப்படும் சேவைத் தொகுதியாகவும் இந்த நிறுவனம் செயல்படுகிறது. இதன் பெறுபேறுகளாக இந்த வருடத்தில் வெற்றிகரமான பெறுபேறுகளை மாகாணத்திற்குப் பெற்றுக்கொள்ளக் கூடியதாக இருப்பதுடன் 2017ஆம் ஆண்டில் கைத்தொழில் பிரிவின் அபிவிருத்தியின் கீழ் 6 திட்டங்களும் விவசாயத் துறையில் 18 வேலைத்திட்டங்களும் சுற்றுலாத் துறையில் 5 திட்டங்களும் சேவைப்பிரிவுகளில் 6 வேலைத்திட்டங்களும் என 17 மி.ரூபாவில் 35 திட்டங்களை நடைமுறைப்படுத்த இந்த நிறுவனத்திற்கு முடியுமாக இருந்தது.

2017ஆம் ஆண்டில் பாடசாலைவிட்டு விலகிய பிள்ளைகளுக்காக கணனிப் பாடநெறி, தொழிற்பயிற்சி பாட நெறிகளை, ஹோட்டல் பாடசாலை அபிவிருத்தி செய்ததன் மூலம் அப்பிரிவு பல்வேறு தொழில் வாய்ப்புகளைப் பெற்றுக்கொள்ள மாகாணத்தின் இளைஞர்களுக்கு சந்தர்ப்பமளித்துள்ளது. 2018ஆம் ஆண்டில் கைத்தொழில்,விவசாயத் தொழில், சுற்றுலா சேவைகளை, மனித வள அபிவிருத்தி, சிறு, மத்திய மகா பரிமாண கைத்தொழில் அபிவிருத்தி, உற்பத்திப் பிரிவுகளை மேம்படுத்துதல், சந்தை வாய்ப்பை விரிவுபடுத்துதல், வர்த்தகக் கண் காட்சிகளை நடத்துதல். தொழில் வண்மை விருத்தி வேலைத்திட்டங்கள் மற்றும் தொழில் வாய்ப்பினை ஏற்படுத்தும் வேலைத்திட்டங்களை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடத்துவதற்கு கவனம் செலுத்தப்பட்டுள்ளது. இந்த நிறுவனத்தினால் தேடப்பட்ட பணத்தைக் கொண்டு அதிக வேலைத்திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படுவதுடன் மாகாணத்தின் அபிவிருத்திக்காக நிறைவேற்றப்படும் இச் செயல்பாடுகள் மதிக்கப்பட வேண்டும்.

**மாகாண வருமான திணைக்களம்.**

சட்ட ரீதியினை வருமான வழிகளின் மூலம் வருமானத்தை சேகரித்தல், வரி மற்றும் கட்டணங்கள் செலுத்த வேண்டியவர்கள் சம்பந்தமாக தகவல்களைப் பெற்று அது சம்பந்தமாக நேர்மையான விதத்தில், சமத்துவத்துடன், நியாயமாக செயல்பட்டு மத்திய மாகாணத்தின் வருமானத்தை அதிகரிப்பதன் மூலம், மாகாண மக்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்தும் நோக்கில் வருமான இலக்கை எட்டுதல், புதிய வருமான மையங்கள் பற்றி ஆய்வு மற்றும் அபிவிருத்தி, புதிய தொழில் தகைமைகளை அதிகரித்தல் மற்று நல்லாட்சியை நடத்துதல் போன்ற கடமைகளை நிறைவேற்றுகிறது.

2017ஆம் ஆண்டில் பாக்கி பொருள் சேர் வரிகளை சேகரித்தல் சொத்துக்களை ஒப்படைத்தல் மூலம் முத்திரை வரி, எரிபொருள் வரி, பந்தய வரி, நகை அடகு பிடிப்பவர்களிடமிருந்து அறவிடப்படும் கட்டணம் உட்பட இந்த வருட நவம்பர் மாதம் வரை 1541 மி. ரூபா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மொத்த வருமானமாக சேர்க்கப்பட்டுள்ளது. அதன்படி வருடாந்த இலக்கான 1593 மி.ரூபாவை வருட இருதிக்குள் வழங்கக் கூடியதாக இருந்தது. இந்த திணைக்களத்தின் அபிவிருத்தி வேலைகளுக்காக 2018ஆம் ஆண்டில் 4.மி.ரூபாவை ஒதுக்க முன் மொழிகிறேன்.

## அரச சேவை ஆணைக்குழு

மக்கள் சேவைக்கு அர்ப்பணிப்புடன், திறமையான, செயல்திறன்மிக்க, பக்கச்சார்பற்ற திருப்தியான அரச சேவையை செய்து 2017ஆம் ஆண்டில் 242 ந ியமனங்களுட்பட நியமனங்களை நிரந்தரமாக்குதல், 376உம் இடமாற்றம் செய்தல், 1029உம் இணைப்புச் செய்தல், 208உம் பதவி உயர்வு வழங்குதல், 331உம், ஓய்வெடுக்கச் செய்தல், 342உம் பரீட்சைகளை ஒழுங்கமைத்து நடத்துதல் 11உம் போன்ற விடயங்களை நிறைவேற்றியதன் மூலம் நல்லாட்சியின் மீது செயல் திறனோடு ஒத்துழைக்கும் மாகாண அரச சேவையினை வழங்குவதற்கு கைகொடுத்தது. இதனை தொடர்ச்சியாக முன்னெடுத்து செல்வதற்காக 2018ஆம் ஆண்டிற்காக 1 மி.ரூபாவை ஒதுக்கித்தர முன்மொழிகிறேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**சபை செயலாளர் காரியாலயம்.**

மத்திய மாகாண சபையின் சட்ட ரீதியிலானவர்களுடன் தொடர்புபட்டு செயல்படுவதற்குத் தேவையான ஒத்துழைப்பை வழங்குதல் உட்கட முக்கிய பொறுப்புகள் சபை செயலாளர் காரியாலயத்தினால் நிறை வேற்றப்படுவதுடன். இந்த நிறுவனம் 2017ஆம் ஆண்டில் சபைக் கட்டடங்கள் 17ஐயும் மாகாண அரச கணக்குகள் பற்றிய குழுக்கூட்டம் 13 ஐயும், மக்கள் மனுக்கள் பற்றிய குழுக்கூட்டம் 14ஐயும், நியதிச்சட்டங்களும் சட்டங்களும் பற்றிய குழுக் கூட்டங்கள் 5ஐயும் நடத்தவும்,ஒவ்வொரு அமைச்சுகளுக்குரிய ஆலோசனைக்குழுக் கூட்டங்கள் 21ஐயும் நடத்துவதற்குத் தேவையான கடமைகளை நிறைவேற்றி, நல்லாட்சிக் கொள்கைகளுக்கு ஏற்ப செயல்பட்டு மாகாணத்தின் அரசியல் தலைமைகளுக்கு மாகாணத்தின் சமூக பொருளாதார அபிவிருத்திக்கு ஒத்துழைப்பதற்குத் தேவையான பின்னணியை ஏற்படுத்திக் கொடுக்க நடவடிக்கை எடுத்துள்ளது. இவற்றை நிறைவேற்றுவதற்காகவும் நிறுவன திறன் விருத்திக்காகவும் இந்த வருடத்தில் 0.5 மி.ரூபா ஒதுக்கப்பட்டிருந்ததுடன். சம்பந்தப்பட்ட நடவடிக்கைகளை முறையாக முன்னெடுத்து செல்வதற்காக 2018ஆம் ஆண்டில் 1.மி.ரூபாவை ஒதுக்குவதற்கு முன் மொழிகிறேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நிர்வாப் பிரிவு

நூதன தொழிநுட்ப முகாமைத்துவ முறைகளுக்கும் மூல தர்மங்களுக்கும் ஏற்ப சொத்துக்களையும் மனித வளங்களையும் முறையாக உபயோகிப்பதன் மூலம் சகலருக்குமிடையில் முறையான தொடர்பாடலின் மூலம் தொழில் ரீதியான நிர்வாக பிரிவாக மாற்றுதல் எனும் நோக்கமாகக்கொண்டு பிரதான செயலாளருக்குரிய சகல விதமான நிர்வாக நடவடிக்கைகளைப் போன்று மத்திய மாகாணத்தோடு தொடர்புடைய சேவைகளுக்கு உரியவர்களின் நிறுவன நடவடிக்கைகள் ஒழுக்காற்று நடவடிக்கைகளுக்குரிய சகல சிபாரிசுகளை வழங்குதல், நிலையான சொத்துக்களை நிர்வகித்தல். இணைப்பு நடவடிக்கைகளை செயல் திறனோடு செய்துள்ளது.

அதேபோன்று தகவல்களைத் தெரிந்துகொள்ளும் சட்டத்தின் கீழ் கிடைத்த சகல விண்ணப்பங்களும் நிறைவேற்றப்பட்டுள்ளதுடன் 2017ஆம் ஆண்டில் மாகாண சபைக்கு அளிக்கப்பட்ட தேசிய மற்றும் வேலைத்திட்டங்களை முறையாக ஏற்பாடு செய்திருத்தது.

## ஆளணி மற்றும் பயிற்சிப் பிரிவு

மக்கள் மனங்கவரும் அரச சேவைக்காக தரமான மனித வளமொன்றை உருவாக்கும் நோக்கில் முகாமைத்துவ பயிற்சி செயலமர்வுகள் 55உம் செயற்றிறன் பயிற்சி வேலைத்திட்டங்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

19உம் கல்விச் சுற்றுலா 2உம் உள்ளூராட்சி பயிற்சி வேலைத்திட்டங்கள் 10உம், அரச மொழிகள் பயிற்சி வேலைத்திட்டங்கள் 3உம் உட்பட பயிற்சி வேலைத்திட்டங்கள் 89உம் பட்டப் பின்பட்டதாரி விண்ணப்பதாரிகள் 70 பேருக்குபட்டப்பின்பட்ட பாடநெறிக்காக நிதி அனுசரனை வழங்கி மாகாணத்தின் மனித வள விருத்திக்காக ஒத்துழைத்துள்ளது.

மாகாண அரச சேவையை திறன் மிக்கதாக்குவதற்கு அரச ஊழியர்களான அறிவு மனப்பாங்கு திறன் விருத்தி செய்து பொறுத்தமான விதத்தில் நடத்தப்பட வேண்டியது மிகத் தேவையானது என்பது எனது நம்பிக்கையாகும். அதன்படி அறிவு, திறன், மனப்பாங்கு விருத்தியின் மூலம் தரமான அரச சேவைக்கான வேலைத்திட்டங்களுக்கு 2018ஆம் ஆண்டிற்காக 8 மி.ரூபாவை ஒதுக்க முன்மொழிகிறேன்.

## நிதி முகாமைத்துவம்.

மாகாண சபை என்ற வகையில் நிதி முகாமைத்துவத்தின் போது நாம் முகங்கொடுக்கும் முக்கியமான சவாலானது மக்களின் தேவைகளை செயல் திறனோடு நிறைவேற்றுவதற்கு ஏற்ற விதத்தில் முறையான மட்டத்தில் நிதி முகாமைத்துவத்தை மேற்கொள்வதும், இருக்கும் நிதி வளங்களை முறையாகப் பயன்படுத்துவது மேயாகும். இதற்காக உண்மையான வரவு செலவு முறை, சரியான புள்ளி விபரத்துடனான கணக்கு வைத்தல், நேர்மையான



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முறையில் நிதி நடவடிக்கைகளை அறிவிப்பதற்கு மாகாண சபை என்ற வகையில் நாம் எப்போதும் முயற்சி எடுக்கிறோம் சிறந்த நிதி அறிவித்தலுக்கான கணக்குகளை வைத்தல் அபிவிருத்திக்காக 2018ஆம் ஆண்டில் 2.மி.ரூபாவை ஒதுக்கித்தர முன்மொழிகிறேன்.

**பொறியியல் சேவைப் பிரிவு**

மத்திய மாகாணத்தில் 10 மி.ரூபா வரையிலான நிர்மான வேலைகளுக்காக ஒப்பந்தங்களை பொறுப்பேப்பதற்காக மாகாணத்தின் ஒப்பந்தக்காரர்களை தரப்படுத்தி பதிவு செய்து மாகாணத்தின் சிவில் நிர்மான வேலைகளுக்காக வருடாந்த விலை மனுப்பட்டியலை தயாரித்து நிர்மான நிறுவனங்களுக்கு விறியோகிப்பது இந்த நிறுவனத்தின் முக்கிய பணியாகும்.

மத்திய மாகாண சபையினால் மேற்கொள்ளப்படும் கட்டடம் நிர்மானம், திட்டமிடல், முன் வழங்கல் செய்தலை மேற்பார்வை செய்தல், நிர்மான நிர்வாகமும் அவற்றின் பராமரிப்பு நடவடிக்கைகளை வழிநடத்துதல் திணைக்களத்தின் முக்கிய பணியாகும். மேலும் மாகாணத்தின் பொறியியல் மாணவர்கள மற்று பொறியியல்தொழில் புரிவோர்க்கு தேவையான பல்வேறு பயிற்சிகான வழங்குவதும் மேற்கொள்ளப்படுகிறது.

2017ஆம் ஆண்டில் 8000 மி. ரூபா பெறுமதியான கல்வி, சுகாதாரம் மற்றும் வேறு கட்டட நிர்மான வேலைகளுக்காக ஒத்துழைப்பு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வழங்கப்பட்டுள்ளதுடன் 2018ஆம் ஆண்டில் நிர்மானிக்க திட்டமிடப்பட்டுள்ள கெட்டம்பே சுற்றுலா மேம்பாட்டு நிலையம், நுவரெலிய சிங்கள் ட்ரி விடுமுறை வாசஸ்தலம், பயிற்சி நிலையம், விக்டோரிய மெழுகு நூதனசாலை,தெல்தொட்ட பிரதேச வைத்திய சாலையின் வெளி நோயாளர் பிரிவு போன்ற விசேட வேலைத்திட்டக்குத் தேவையான ஒத்துழைப்பு வழங்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

மாகாண கணக்காய்வு பிரிவு

கண்டி,மாத்தளை,நுவரெலிய எனும் மூன்று மாவட்டங்களிலும் மாவட்ட காரியாலயங்கள் அமைக்கப்பட்டதோடு பரந்த வலையமைப்புடன் சென்ற மாகாண சபைக்கு சொந்தமான அமைச்சுக்கள் அதன்கீழ் ஸ்தாபிக்கப்பட்ட நிறுவனங்கள் மற்றும் நியதிச்சட்டங்களின் மூலம் அமைக்கப்பட்டுள்ள சபைகள் அதிகார சபைகள், சபைகள் ஆகியவற்றில் 2017ஆம் ஆண்டில் கணக்காய்வு விசாரணை நடவடிக்கைகள் 339ற்கு கிட்ட எண்ணிக்கையானவை. மேற்கொள்ளப்பட்டுள்ளன. அதேபோல பிரதான செயலாளர், ஆளுநரின் செயலாளர்களால் வழங்கப்படும் விசேட விசாரனையைப் போல இத்திணைக்களத்திற்கு மாகாணத்தின் பல்வேறு நிறுவனங்கள் மூலம் கிடைக்கும் முறைப்பாடுகள் சம்பந்தமாகவும் விசாரணைகள் மேற்கொள்ளப்படுகின்றன. அரச நடவடிக்கைகளில் நல்லாட்சிக் கொள்கைகளைப் பாதுகாத்து நிறுவனம் மற்றும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிறுவன ரிதியிலும் நிதி நிலைமையிலும் மத்திய மாகாண சமூக பொருளாதார அபிவிருத்தினை சரியான வழிக்கு இட்டுச் செல்ல மாகாண கணக்காய்வு பிரிவு எடுக்கும் முயற்சியை மதிக்கிறேன்.

கௌரவ தலைவர் அவர்களே,

ஆறாவது மாகாண சபையின் ஐந்தாவது வரவு செலவு திட்டம் பற்றி இதுவரை கருத்துத் தெரிவித்த நான் வரவு செலவு திட்ட உரையை முடிக்கு முன்பு எமது மாகாண சபையின் கடந்தகாலத்திற்கு எமது நினைவை சிறிது மீட்டுப்பார்ப்பது பொறுத்தமானது என நினைக்கிறேன்.

எம்மால் மத்திய மாகாண சபையின் நிர்வாகப் பொறுப்பை மேற்கொண்ட கடந்த சில வருடங்கள் பற்றி சுருக்கமாக கருத்து தெரிவிப்பது பொறுத்தமானது என நினைக்கிறேன். 2015ஆண்டில் இலங்கையின் சிறந்த மாகாண சபையாக ஏற்றுக்கொள்ளப்படுவதாக நாம் அணைவரும் தூரநோக்கமொன்றை ஏற்படுத்திக் கொண்டோம் (Vision Statement) இந்த நோக்கத்தை அடைவதென்பது மிகவும் சவால் நிறைந்த விடயமென்பது நாம் அப்போதிருந்த நிலைமை என்பதை கவனத்திற்கெடுத்தபோதே ஆகும். பௌதீக வளங்கள் என்ற வகையிலும், மனித வளம் என்ற வகையிலும் நாம் மிகவும் பின் தங்கிய நிலையிலேயே இருந்தோம். செயல் திறனை அளந்து பார்க்கும் பல்வேறு சுட்டிகளின்படி எமது நிலைமை மிகவும் கவலைக்குரியதாக இருந்தது. கணக்காளர் நாயகத்தின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறிக்கைகளில் காட்டப்பட்ட ஆய்வுகள் மற்றும் மக்களின் வெளிப்பாடுகள் மோசமாகின. காரியாலயங்களை நடத்திச் செல்வதற்கும், மக்கள் சேவைகளை வழங்குவதற்கும் இருந்த வேறு நிறுவனங்களின் பௌதீக வளம் கவலைக்குரியதாக. இருந்தது இப்படிப்பட்ட சவால்களுக்கு மத்தியில் மத்திய மாகாணத்தில் பௌதீக மற்றும் மனித வளத்தை முறையாக முகாமைத்துவம் செய்து எதிர்ப்பார்த்த இலக்கை நிறைவேற்றிக் கொள்வதற்காக அனைவரினதும் செயல் திறன்மிக்க நன்மையிக்கு சேவையையும் அரப்பணிப்பையும் அதி சிறந்ததாகும். இதற்காக கௌரவ ஆளுநர்கள், கௌரவ அமைச்சர்கள்,கௌரவ உறுப்பினர்கள், உட்பட சகல உத்தியோகத்தர்களினதும் ஒத்துழைப்பை எதிர்ப்பார்த்ததுடன் அது எனக்கு குறையாது கிடைத்தது என்பதை இதயபூர்வமாக குறிப்பிடுகிறேன்.

அதன்படி எமக்கு கடந்த சில வருடங்களில் மாகாண சபை கட்டடத் தொகுதி, நூலக சேவை சபை, முகாமைத்துவ பயிற்சி நிலையம், பயணிகள் போக்குவரத்து சேவைகள் அதிகார சபை, திகன விளையாட்டு மைதானம், தெல்தெனிய வைத்தியசாலை,டிக்கோய வைத்தியசாலை, புதிய பிரதேச சபை கட்டடங்கள் உட்பட பாரிய அளவில் பௌதீக வளங்களை மாகாணத்திற்கு பெற்றுக்கொடுக்கக் கூடியதாக இருந்தது. அமைச்சுக்களுக்கும் நிறுவனங்களுக்ககுமிடையில் செயல் திறன் போட்டித் தொடர்களை நடத்தி மனித அபிவிருத்திக்கு பாரிய ஒத்துழைப்பை பெற்றுத்தரக் கூடியதாக இருந்தது. பல்வேறு மட்டங்களில் தொடர்ச்சியாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முன்னேற்ற கலந்துரையாடல் செயல்பாடுகளின் மூலம் எதிர்ப்பார்த்த இலக்கை நோக்கி பயணிக்கக் கூடியதாக இருந்தது.

எம்மால் சகல பிரிவுகளிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட வெற்றிகள் பற்றி நான் ஒஒவ்வொன்றாக சுட்டிக்காட்ட நினைக்கவில்லை. என்பதுடன் இந்த மாதத்தில் பெற்றுக்கொள்ளப்பட்ட குறிப்பிடத்தக்க வெற்றியை மட்டும் ஞாபகப்படுத்த இதை சந்தர்ப்பமாக்கிக் கொள்கிறேன்.

கௌரவ தலைவர் அவர்களே,

இலங்கைப் பாராளுமன்றத்தின் அரச கணக்குகள் பற்றிய நிர்வாகக் குழுவினால் நடைமுறைப்படுத்தப்பட்ட 2015ஆம் நிதி ஆண்டின் மதிப்பீட்டு வேதைல்திட்டத்தின் கீழ் மத்திய மாகாண சபையினால் நிறைவேற்றப்பட்ட செயல்பாடுகளை மதித்து "ஏற்றுக்கொள்ளும் சான்றிதழ்" Cetificate of Recognition அதிமேதகு ஜனாதிபதி அவர்களின் கைகளால் 2017.11.13 ஆம் திகதி பாராளுமன்றத்தில் மத்திய மாகாண பிரதான செயலாளருக்கு வழங்கப்பட்டது. நல்லாட்சிக்கொள்கைகளை பின்பற்றி செயல்திறன்மிக்க பலன்தரும் அரச சேவை மத்திய மாகாணத்தில் நிறைவேற்றப்பட்டுள்ளது என தேசிய மட்டத்தில் அதிஉயர் நிறுவனமான இலங்கை பாராளுமன்றத்திலிருந்து கிடைத்த இந்த உறுதிப்படுத்துதலை மத்திய மாகாணத்திற்கு பெற்றுக்கொடுத்தமைக்காக முதல் அமைச்சர் என்ற வகையில் மத்திய மாகாணத்தின் ஆளுங் கட்சி, எதிர்க்கட்சி உறுப்பினர்களின் பாராட்டுதல்களும் கௌரவமும் மாகாணத்தின் பிரதான செயலாளர் உட்பட உத்தியோகத்தர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குழுமத்தின் சகல சாரார்களுக்கும் தெரிவிக்க இதை சந்தர்ப்பமாக்கிக்கொள்ள விரும்புகிறேன்.

கௌரவ தலைவர் அவர்களே,

சிரமங்களுக்கு மத்தியில் பெற்றுக்கொள்ளப்பட்ட இந்த வெற்றி மாகாண சபை என்ற வகையில் எம் அணைவருக்கும் உரித்தானது. இதற்காக ஒத்துழைத்த அணைவருக்கும் நான் நன்றி கூறுகிறேன். மேலும் மக்களின் நலனுக்காக முடிந்தவரை செயல்படுவதற்கு நாம் அணைவரும் சங்கல்பம் பூணுவோம். அந்த இனி வரும் பயணமும் சவால்கள் நிறைந்தவையே, முறையான தொடர்புகளை ஏற்படுத்திக் கொண்டு மிகக் கவனமாக செயல்பட்டு நல்ல பெறுபேறுகளை பெற்றுக்கொள்ள நாம் முயற்சி எடுப்போம் என முன்மொழிகிறேன்.

ஆறாவது மாகாண சபையின் ஐந்தாவது வரவு செலவு உரையின் இறுதிக் கட்டத்திற்கு வந்து நான் மாகாணத்தின் சகல நடவடிக்கைகளுக்காகவும் எச்சரிக்கை, ஆசியுரை, ஆலோசனை, வழிக்காட்டல்களை மேற்கொண்ட அணைவருக்கும் நன்றி கூற இதை சந்தர்ப்பமாக்கிக்கொள்கிறேன்.

கௌரவ தலைவர் அவர்களே,

எமது மாகாண மக்களைப் போன்று முழு நாட்டு மக்களினது சுக நலனுக்காக விசேச ஊக்கமெடுத்து அர்த்தமுள்ள தர்ம ரீதியில் அசியுரை வழங்கி செயல்படுகின்ற அதி வணக்கத்திற்குரிய மகாநாயக்க மதகுருமாருக்கும், மதகுருமார்களுக்கும் சகல வேற்று மதத் தலைவர்களுக்கும் எனது பணிவான நன்றியை இங்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதலில் சமர்ப்பிக்கிறேன். அதே போல 2018 ஆம் ஆண்டிலும் குறிப்பிட்ட ஆசிர்வாதங்களுடன் மாகாணத்தின் முன்னேற்றத்தையும் எதிர்ப்பார்க்கிறேன்.

மேலும் எமது மாகாண சபையின் நடவடிக்கைகள் மற்றும் முன்னேற்றத்திற்காக தொடர்ச்சியாக ஆராய்ந்து பார்த்து ஆலோசனை வழங்கும் அதிமேதகு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அவர்களுக்கும். கௌரவ பிரதமர் ரணில் விக்கிரமசிங்க அவர்களுக்கும் எனது கௌரவ பூர்வ நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதே போல அதிமேதகு ஜனாதிபதி அவர்களின் பிரதிநிதியாகவும், மாகாணத்தின் முதல் பிரஜையாகவும். ஆலோசனை வழங்கி மாகாணத்தின் சமூக, பொருளாதார அபிவிருத்திக்கு தொடர்ச்சியாக செயல்படும் கௌரவ ஆளுநர் நிலுக்கா ஏக்கநாயக்க அவர்களுக்கும் எனது கௌரவ பூர்வ நன்றியை தெரிவிக்கிறேன். அதேபோல மாகாண சபையின் நடவடிக்கைகளை கட்சி பேதமின்றி நிறைவேற்றும் கௌரவ தலைவர் அவர்களுக்கும் பிரதி தலைவர் அவர்களுக்கும், கௌரவ அமைச்சுக் குழுவினர்க்கும், கௌரவ எதிர்க்கட்சி தலைவர் அவர்களுக்கும், ஆளுங்கட்சி, எதிர்க்கட்சி கௌரவ உறுப்பினர்களுக்கும் எனது இதய பூர்வமான நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

2017ஆம் ஆண்டின் செயல்பாடுகளுக்காக மாகாணத்தின் அரச சேவையின் சகல உத்தியோகத்தர்களை வழிநடத்தி முறையாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிதி முகாமைத்துவம் செய்து, அபிவிருத்தியின் முன்னேற்றத்தை ஆராய்ந்து பார்த்தும் குறைபாடுகளை நிவர்த்தி செய்தும் செயல்படும் பிரதான செயலாளர், ஆளுநரின் செயலாளர், அரச சேவை ஆணைக்குழுவின் தலைவர், செயலாளர், சபை செயலாளர் காரியாலயத்தின் செயலாளர், அமைச்சின் செயலாளர்கள், பிரதி பிரதான செயலாளர்கள், திணைக்களத் தலைவர்கள் உட்பட சகல அரச உத்தியோகத்தர்களுக்கும் எனது நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மேலும் மாகாண சபையின் நடவடிக்கைகளை முறையாக நடத்திச் செல்ல உதவி புரிந்து சபை செயலாளர் காரியாலயத்தின் ஆளணியினர்களுக்கும், மாகாண சபையின் சகல நடவடிக்கைகளையும் வெற்றிகரமாக்கிக்கொள்ள ஒத்துழைத்த பாதுகாப்பு பிரிவுகளின் அணைவருக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். அடுத்த வருடத்திலும் உங்களனைவரினதும் தொடரச்சியான ஒத்துழைப்பை நான் எதிர்ப்பார்க்கிறேன்.

அதேபோல மாகாண சபையின் அபிவிருத்தி செயல்பாடுகள் பெரும்பாலனவற்றை நிறைவேற்றிய முன்னால் நகரசபை சபைத் தலைவர்கள் கௌரவ பிரதேச சபைத்தலைவர்கள், மாவட்ட செயலாளர்கள், மூவருக்கும், பிரதேச செயலாளர்கள் உட்பட ஆளணியினர்களுக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மத்திய மாகாண சபையின் அபிவிருத்தி செயல்பாடுகளை மாகாணத்தின் பொது மக்களுக்கும் தெரிவிக்கும் வகையில் சகல கட்புல செவிப்புல ஊடகங்களின் மூலம் தகவல்களை வழங்கும் மாகாணத்தின் சகல ஊடகவியலாளர்களுக்கும், அவர்களால் நிறைவேற்றும் அளப்பரிய சேவைக்காக எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். அதேபோன்று உங்களுக்கும் எங்களுக்கு மிடையில் முறையான விளக்கத்துடன் உண்மைத் தகவல்களை தெளிவாக சமூகத்திற்கு தெரிவிப்பதற்காக ஊடகவியலாளர்களின் ஒத்துழைப்பை இனி வரும் காலங்களிலும் எதிர்ப்பார்க்கிறேன். எமது பாதுகாப்பை வழங்கி செய்யப்படும் சேவைகளுக்காக குண்டசாலை பொலிஸ் நிலையத்தின் சகல உத்தியோகத்தர்களுக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இறுதியாக மத்திய மாகாணத்தின் மொத்த மக்களினதும் வாழ்க்கைத் தரத்தை உயர்த்த 2018ஆம் ஆண்டிற்காக உங்களனைவரினதும் ஒத்துழைப்பையும் எதிர்ப்பார்த்து எனது வரவு செலவு உரையை நிறைவு செய்கிறேன்.

உங்கள் அணைவருக்கும் மும்மணிகளின் ஆசிகிட்டட்டும்.

சரத் ஏக்கநாயக்க

முதல் அமைச்சர்

மத்திய மாகாண சபை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மூலதன முதலீட்டு வேலைத்திட்டம்

மத்திய மாகாண சபை

சுருக்கம்

| தொடர் இல | அமைச்சு/நிறுவனம் | மாகாண நிலையான | உபமாணிய கொடை | மொத்த |
|---|---|---|---|---|
| 1 | ஆளுநர் காரியாலயம் | | 5.00 | 5.00 |
| 2 | மாகாண சபை செயலாளர் காரியாலயம் | | 1.00 | 1.00 |
| 3 | மாகாண அரச சேவை ஆணைக்குழு | | 1.00 | 1.00 |
| 4 | பிரதான செயலாளர் காரியாலயம் | 256.107 | 364.00 | 620.11 |
| 5 | பிரதான அமைச்சு | 502.00 | 7.80 | 509.80 |
| 6 | சுகாதார அமைச்சு | 814.80 | 2.50 | 817.30 |
| 7 | விவசாய அமைச்சு | 300.00 | 2.50 | 302.50 |
| 8 | கைத்தொழில் அமைச்சு | 75.00 | 2.50 | 77.50 |
| 9 | பாதைகள் அபிவிருத்தி அமைச்சு | 473.00 | 2.50 | 475.50 |
| | மொத்தம் | **2,420.907** | **388.80** | **2,809.71** |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மத்திய மாகாண சபையின்

## மூலதன முதலீட்டு வேலைத்திட்டம் - 2018

## பிரதான செயலாளர் காரியாலயம்

| தொடர் இலக்கம் | நிறுவனம்/வேலைத்திட்டம் | மாகாண நிலையான | உபமாணிய கொடை | மொத்த |
|---|---|---|---|---|
| 1 | கௌரவ உறுப்பினர்களின் பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவு | | 145.00 | 145.00 |
| 2 | பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவு எஞ்சியவை | | 3.00 | 3.00 |
| 3 | பயிற்சி வேலைத்திட்டங்கள் | | 8.00 | 8.00 |
| 4 | கணக்கீட்டு முறை அபிவிருத்தி | | 2.00 | 2.00 |
| 5 | வாகனங்களுக்கான கால குத்தகை செலுத்துதல். | | 37.00 | 37.00 |
| 6 | மாகாண வருமான வரி திணைக்களம் | | 4.00 | 4.00 |
| 7 | விடுதிகள் மற்றும் IRDP கட்டடதிருத்த வேலைகளும் பௌதீக வள அபிவிருத்தியும் | | 9.50 | 9.50 |
| 8 | விசேச தேவைகளுடனான கிராம அபிவிருத்தி | 200.00 | | 200.00 |
| 9 | நெகிழ்வு ஒதுக்கீடு | 56.11 | | 56.11 |
| 10 | விசேச பொருளாதார உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி வேலைத்திட்டம். | | 145.00 | 145.00 |
| 11 | மாகாண சபை கட்டடத்தின் எஞ்சிய வேலைகள், பராமரிப்பு, பழுதுபார்த்தல். | | 6.00 | 6.00 |
| 12 | அவசர அபிவிருத்தியும் வேறு பொது வேலைகளும். | | 1.50 | 1.50 |
| 13 | முதலீட்டு சொத்துக்களின் புனரமைப்பும் நிலையான சொத்துக்களை கையகப்படுத்துதலும். | | 3.00 | 3.00 |
| | **மொத்தம்** | **256.107** | **364.00** | **620.11** |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மத்திய மாகாண சபை

மூலதன முதலீட்டு வேலைத்திட்டம் -2018

முதலமைச்சும் நிதி, திட்டமிடல், சட்டமும் சமாதானமும், உள்ளூராட்சி,நிர்வாகம், மனிதளம், கல்வி, கலாசார நடவடிக்கைகள், காணி, சுற்றுலா, வர்த்தகம், வாணிபம், உணவு வழங்கலும் பகிர்ந்தளித்தல் நடடிக்கைகளும் முதலீட்டு தொடர்பாடல் வேறு விடயங்களுக்குள் எடுக்கப்படாத விடயங்கள் சம்பந்தமான விடயப்பொறுப்பு அமைச்சு

| தொடர் இலக்கம் | நிறுவனம்/வேலைத்திட்டம் | மாகாண நிலையான | உபமாணிய கொடை | மொத்த |
|---|---|---|---|---|
| 1 | கல்வி அபிவிருத்தி வேலைத்திட்டம் | 225.00 | | 225.00 |
| | 1.வெளிநாட்டு உதவித்திட்டம் | 41.25 | | 41.25 |
| | 2.வெளிநாட்டு உதவித்திட்டம் | 33.75 | | 33.75 |
| 2 | நெனோதா வேலைத்திட்டம் | | | |
| | உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி | 35.00 | | 35.00 |
| | தொழில் பயிற்சியும் திறன்விருத்தியும் | 20.00 | | 20.00 |
| | தர அபிவிருத்தி | 5.00 | | 5.00 |
| 3 | காணி அபிவிருத்தி | | | |
| | காணி அபிவிருத்தி வேலைத்திட்டமும் நிறுவனத் தகைமை அபிவிருத்தியும் | 2.00 | 1.00 | 3.00 |
| | காணி கையகப்படுத்தல் | 3.00 | | 3.00 |
| 4 | உள்ளூராட்சி நிறுவன சேவை | | | |
| | பாரக்கழிவுகள் முகாமைத்துவம் | 18.00 | | 18.00 |
| | வேறு சேவைகள் | 9.00 | | 9.00 |
| | சமூக நீர் வழங்கல் | 17.00 | | 17.00 |
| | உள்ளூராட்சி நிறுவனங்களின் தர மேம்பாட்டு அபிவிருத்தி (திணைக்களங்களும் மாவட்ட காரியாலயங்களும்) | | 2.00 | 2.00 |
| | உள்ளூராட்சி பாதைகள் அபிவிருத்தி | 40.00 | | 40.00 |
| 5 | முன்பிள்ளைப்பருவ அபிவிருத்தி | 4.00 | | 4.00 |
| 6 | கலாச்சார அபிவிருத்தி வேலைத்திட்டம் | 15.00 | | 15.00 |
| 7 | சுற்றுலா வர்த்தக வாணிப வேலைத்திட்டம் | 25.00 | | 25.00 |
| 8 | கூட்டுறவு அபிவிருத்தி | 4.00 | | 4.00 |
| 9 | நூலக அபிவிருத்தியும் புத்தகங்களை கொள்வனவு செய்தலும். | 2.00 | | 2.00 |
| 10 | சுற்றாடல் அபிவிருத்தி வேலைத்திட்டம் | 3.00 | | 3.00 |
| 11 | கூட்டுறவு ஆணைக்குழு (தர விருத்தி) | | 0.80 | 0.80 |
| 12 | ஊடகப் பிரிவுகளின் செயல்பாடுகள் | | 1.50 | 1.50 |
| 13 | அவசர அபிவிருத்தி செயல்பாடுகள் | | 1.50 | 1.50 |
| 14 | முதலீட்டு சொத்துக்களின் புனரமைப்பும்,நிலையியல் சொத்துக்களை கையகப்படுத்தலும் | | 1.00 | 1.00 |
| | **மொத்தம்** | **502.00** | **7.80** | **509.80** |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மத்திய மாகாண சபை

மூலதன முதலீட்டு வேலைத்திட்டம் -2018

சுகாதார தேசிய வைத்தியம், சமூக நலன், முதியோர் பராமரிப்பு,

சிறுவர் நன்னடத்தை சேவைகள் அமைச்சு

| தொடர் இலக்கம் | நிறுவனம்/வேலைத்திட்டம் | மாகாண நிலையான | உபமாணிய கொடை | மொத்த |
|---|---|---|---|---|
| 1 | சுகாதார சேவை | 275.00 | | 275.00 |
| | வெளிநாட்டு உதவித்திட்டங்கள் | 324.80 | | 324.80 |
| 2 | ஆயுர்வேத திணைக்களம் | 125.00 | | 125.00 |
| 3 | நன்னடத்தை சிறுவர் பராமரிப்பு சேவைகள் | 75.00 | | 75.00 |
| 4 | சமூக சேவைகள் நடவடிக்கை | 15.00 | | 15.00 |
| 5 | அவசர அபிவிருத்தி நடவடிக்கைகள் | | 1.50 | 1.50 |
| 6 | மூலதன சொத்துகள் புனரமைப்பும் நிலையான சொத்துக்களை கையகப்படுத்தும் | | 1.00 | 1.00 |
| | **மொத்தம்** | **814.80** | **2.50** | **817.30** |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மத்திய மாகாண சபை

மூலதன முதலீட்டு வேலைத்திட்டம் -2018

விவசாயம்,சிறு நீர்ப்பாசனம், கால் நடை உற்பத்தியும் அபிவிருத்தியும், மீன்பிடி, சுற்றாடல் நடவடிக்கைகள், இந்து கலாச்சார, தோட்ட உட்கட்டமைப்பு அமைச்சு

| தொடர் இலக்கம் | நிறுவனம்/வேலைத்திட்டம் | மாகாண நிலையான | உபமாணிய கொடை | மொத்த |
|---|---|---|---|---|
| 1 | விவசாய அபிவிருத்தி | 60.00 | | 60.00 |
| 2 | விவசாய வழிகள் அபிவிருத்தி | 10.00 | | 10.00 |
| 3 | சிறு நீர்ப்பாசன அபிவிருத்தி | 50.00 | | 50.00 |
| 4 | கால்நடை பராமரிப்பும் சுககாதார அபிவிருத்தியும் | 38.00 | | 38.00 |
| 5 | நன்னீர் மீன்பிடி | 5.00 | | 5.00 |
| 6 | இந்து கலாச்சார நடடிக்கைகள் | 2.00 | | 2.00 |
| 7 | தோட்டப் பாதைகள் அபிவிருத்தி வேலைத்திட்டம் | 35.00 | | 35.00 |
| 8 | தமிழ் கல்வி அபிவிருத்தி | 75.00 | | 75.00 |
| | வெளிநாட்டு உதவித்திட்டம் 1 | 13.75 | | 13.75 |
| | வெளிநாட்டு உதவித்திட்டம் 2 | 11.25 | | 11.25 |
| 9 | அவசர அபிவிருத்தி நடவடிக்கைகள் | | 1.50 | 1.50 |
| 10 | மூலதன சொத்துக்களை புனரமைத்தலும் நிலையான சொத்துக்களை கையகப்படுத்தலும். | | 1.00 | 1.00 |
| | **மொத்தம்** | **300.00** | **2.50** | **302.50** |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மத்திய மாகாண சபை

மூலதன முதலீட்டு வேலைத்திட்டம் -2018

விளையாட்டு, இளைஞர் விவகாரம், மகளீர் விவகாரம் கிராம அபிவிருத்தி கைத்தொழில் அமைச்சு

| தொடர் இலக்கம் | நிறுவனம்/வேலைத்திட்டம் | மாகாண நிலையான | உபமாணிய கொடை | மொத்த |
|---|---|---|---|---|
| 1 | கைத்தொழில் அபிவிருத்தி,தொழில் மேம்பாடு,தொழில் பயிற்சி | 20.00 | | 20.00 |
| 2 | இளைஞர் விவகாரம் | 5.00 | | 5.00 |
| 3 | புடவைக் கைத்தொழில் அபிவிருத்தி | 8.00 | | 8.00 |
| 4 | விளையாட்டு நடவடிக்கைகளும் விளையாட்டு மைதான அபிவிருத்தி | 15.00 | | 15.00 |
| 5 | கிராம அபிவிருத்தி | 20.00 | | 20.00 |
| 6 | மகளீர் விவகாரம் | 7.00 | | 7.00 |
| 7 | அவசர அபிவிருத்தி நடவடிக்கை | | 1.50 | 1.50 |
| 8 | மூலதன சொத்துக்கள் புனரமைப்பும் நிலையான சொத்துக்களை கையகப்படுத்தலும். | | 1.00 | 1.00 |
| | **மொத்தம்** | **75.00** | **2.50** | **77.50** |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org